بـــــسم الله الرحمن الر حــــــــــــيم

# இஜ்மாஉஸ் ஸஹாபா, ஹுக்மன் மர்பூஃ, மவ்கூப், தவாதுருல் அமலி போன்றவைகள் இஸ்லாத்தின் மூலாதாரமாகுமா?

**இஜ்மாஉஸ் ஸஹாபாகே ஹுஜ்ஜத் ஹோ னே கே தலாயில் (இஜ்மாஉஸ் ஸஹாபா மூலாதாரமாகும் என்பதற்கான ஆதாரங்கள்)**

என்ற தலைப்பில் முஹம்மது இஸ்தியாக் எழுதிய நூலிற்கு இலங்கையைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் அகில உலக ஜமாஅதுல் முஸ்லிமீனின் மறுப்பு.

بَلْ نَقْذِفُ بِالْحَقِّ عَلَى الْبَاطِلِ فَيَدْمَغُهُ فَإِذَا هُوَ زَاهِقٌ وَلَكُمُ الْوَيْلُ مِمَّا تَصِفُونَ (الأنبياء: 18)

**மாறாக நாம் சத்தியத்தை அசத்தியத்தின்மீது வீசுகின்றோம். அது அதனை சிதறடிக்கின்றது. அப்போது அது அழிந்து விடுகிறது.** ( அல்குர்ஆன் - 21 : 18 )


வெளியீடு :

Jama-athul Muslimeen

Masjidhul Muslimeen,

Kalpity Road,

Etalai,

Puttalam,

Sri Lanka.

T’ P : 0094 322268818

website : jamaathulmuslimeen.com

e-mail : jamaathulmuslimeen@gmail.com

எனது உம்மத் 73 கூட்டங்களாகப் பிரியும் அதில் ஒரு கூட்டம் மட்டுமே சுவனம் நுழையும் என்ற ஹதீஸ் மிகவும் பிரபல்யமானது. அதேபோன்று பிரிவுகள் காணப்படக் கூடிய காலத்தில் ஜமாஅதுல் முஸ்லிமீன் என்ற அமைப்பு காணப்பட்டால், அனைத்துப் பிரிவுகளை விட்டும் ஒதுங்கி, ஜமாஅதுல் முஸ்லிமீனையும் அதன் இமாமையும் பற்றிப் பிடித்துக் கொள்ளும்படி நபி ﷺ அவர்கள் கட்டளையிட்ட ஹதீஸும் பிரபல்யமானது.

இந்த ஹதீஸ்களின் அடிப்படையில் 1990ம் ஆண்டில் இலங்கையில் பல பிரிவுகள் காணப்பட்டன. ஒவ்வொரு பிரிவும் இஸ்லாத்தின் மூலாதாராமாகிய குர்ஆன், ஸுன்னாவைப் புறந்தள்ளிவிட்டு இஜ்மா.:., கியாஸ், இஸ்திஹ்ஸான், மஸாலிஹுல் முர்ஸலா, ஸரஹ் மன் கப்லனா, பஹ்முஸ் ஸஹாபா ........ போன்றவைகளைப் பின்பற்றிக் கொண்டு ஷிர்க், குப்ர், பித்அத், ஜாஹிலிய்யத், கப்ர் வணக்கம் போன்றவற்றில் மூழ்கிக் கிடந்ததைக் கண்டு மூன்று உலமாக்களின் முயற்சியால் இலங்கை மண்ணில் ஜமாஅதுல் முஸ்லிமீன் உருவாகியது.

இந்த ஜமாஅத்தின் அடிப்படைகள் பின்வருமாறு அமைந்திருந்தது :-

01. இஸ்லாத்தின் மூலாதாரம் அல்குர்ஆனும் ஹதீஸும் மாத்திரமே.

02. இவ்விரண்டின் ஒளியில் ஒரு அமீர் தேர்ந்தெடுக்கப்பட்டது.

03. அமீருக்குக் கட்டுப்படுவது கட்டாயமாகும்.

04. இந்த ஜமாஅத்தில் பைஅத் செய்து அதாவது ஷஹாதத் கலிமாவை மொழிந்து உள்ளே நுழைந்தால், அவர் இலந்தை இலை போட்டு குளித்து முஸ்லிமாகின்றார். இவ்வாறு பைஅத் செய்யாமல் ஒருவர் மரணித்தால் அவர் ஜாஹிலிய்யத்தில் மரணிப்பார். பைஅத்தை முறித்துக் கொண்டு ஜமாஅத்திலிருந்து வெளியேறினால், அவர் முர்தத்தாகக் கருதப்படுவார். யார் இந்த சத்தியத்தை நிராகரிக்கின்றாரோ, அவர் நிராகரிப்பவராகக் கருதப்படுவார். இந்த ஷஹாதத் கலிமாவைக் கூறி பைஅத் செய்பவர் இந்த 72 பிரிவுகளிலிருந்து வந்தவராயினும் சரி, அல்லது ஏனைய மதங்களிலிருந்து வருபவராயினும் சரியே. இதில் எந்தவித பாகுபாடும் இல்லை.

05. பிரிவினை கூடாது, அது இணைவைத்தலாகும். இந்த உண்மையான ஜமாஅதுல் முஸ்லிமீனில் இருந்து எக்காரணத்தைக் கொண்டும் பிரியக்கூடாது.

06. 73 பிரிவுகளில் ஒரு கூட்டம் மட்டுமே சுவனம் நுழையும்.

07. பிரிவுகளிலிருந்து மக்கள் ஒதுங்கி இந்த ஜமாஅதுல் முஸ்லிமீனில் நுழைய வேண்டும்.

08. எந்தவொரு விடயத்திலும் கருத்து முரண்பட்டால், அல்லாஹ்வின்பாலும் அவனது தூதரின்பாலும் கொண்டு செல்ல வேண்டும்.

09. இதுபோன்ற ஒரு அமைப்பு உலகில் எங்காவது காணப்பட்டால், பிந்திய அமைப்பு முந்திய அமைப்புடன் இணைந்து கொள்ள வேண்டும்.

10. பைஅத் செய்தவர் ஏதோ ஒரு காரணத்திற்காக பைஅத்தை முறித்துக் கொண்டு முர்தத்தாகி, மீண்டும் இந்த ஜமாஅத்தில் இணைந்து கொள்ள விரும்பினால், மீண்டும் ஷஹாதத் கலிமாவை மொழிந்து பைஅத் செய்ய வேண்டும்.

இந்த அடிப்படையில் இந்த ஜமாஅத் இயங்கிக் கொண்டிருக்கும்போது பாகிஸ்தானிலும் இவ்வாறான ஒரு ஜமாஅத் இருப்பதாகக் கேள்விப்பட்டு, அல்குர்ஆனின் 3:103ம் வசனத்தின் பிரகாரம் பிரிந்திருக்க முடியாது என்ற அடிப்படையில் அது முந்தியதாக இருந்தால், நாம் அதனுடன் இணைய வேண்டும். நாம் முந்தியதாக இருந்தால் அவர்கள் எம்முடன் இணைய வேண்டும் என்ற கருத்தில், இந்த ஜமாஅத்தைத் தேடி பாகிஸ்தான் சென்றோம். அங்கு மஸ்ஊத் அஹ்மதின் இந்த ஜமாஅத் கிடைத்தது. வெளிப்படையில் பார்த்தபோது, இலங்கை ஜமாஅத்தின் கொள்கையைக் கொண்டவர்களாகவே காணப்பட்டார்கள். குர்ஆன், ஹதீஸ் மாத்திரமே இஸ்லாத்தின் மூலாதாரம் என்றும் அவர்கள் எங்களுக்கு முந்தியதாகவும் கூறினார்கள். உடனே அல்லாஹ்வின் ஆயத்தின் அடிப்படையில் நாங்கள் அதில் இணைந்து, ஒரு கிளையாக இயங்கி வந்தோம்.

முஹம்மது இஸ்தியாக் அமீரானபின் அவரின் நடவடிக்கைகள் அல்குர்ஆன், ஸுன்னாவுக்கு மாற்றமாக காணப்படும்போது எங்களுக்கு சில சந்தேகங்களை ஏற்படுத்தியது. உதாரணமாகக் கூறுவதாயின், ஒரு முஸ்லிம் தாடியைக் கத்தரிக்கலாம்; தஹிய்யதுல் மஸ்ஜித் ஒரு முறை தொழுதால் போதுமானது; பள்ளிக்குள் ஸுத்ரா தேவையில்லை; இரண்டாவது திருமணத்திற்கு முதல் மனைவியின் அனுமதி தேவை; நபி ﷺ அவர்களுடைய கப்றில் வஸீலா தேடலாம் போன்ற விடயங்களைக் கூறலாம். இவ்வாறு இன்னும் பல விடயங்கள் உள்ளன.

இதற்கு மத்தியில் மஸ்ஊத் அஹ்மதின் “ஜமாஅதுல் முஸ்லிமீன் அப்னீ த.ஃ.வத் ஓர் தஹ்ரீகே ஆயினாமே” என்ற நூலை படித்தபோது, அதிலிருந்து குர்ஆன், ஸுன்னாவுக்கு முரணான பல விடயங்கள்; அதாவது இஸ்லாத்தின் அடிப்படைகளையே தகர்க்கக் கூடிய பல விடயங்கள் வெளிச்சத்திற்கு வந்தது, நாங்கள் அவர்களுடன் இணையும்போது இஸ்லாத்தின் மூலாதாரம் இரண்டு என்றே சொன்னார்கள். நாங்களும் அதனை நம்பினோம். ஆனால் மஸ்ஊத் அஹ்மதின் நூல்களை வாசிக்கும்போது மார்க்கத்திற்கு முரணான விடயங்கள் அதில் காணப்பட்டன. குர்ஆன், ஸுன்னாவுடன் இன்னும் பலவற்றையும் மூலாதாரமாக எடுத்திருந்தார்கள். அவைகள் பின்வருமாறு :

01. தவாதுருல் அமல்

02. மவ்கூப்

03. ஹுக்மன் மர்பூ.ஃ

04. இஜ்மாஉஸ் ஸஹாபா

05. பஹ்முஸ் ஸஹாபா

06. கியாஸ்

இவ்விடயங்களைக் கண்டதும் இவை தவறுதலாக நுழைந்திருக்கலாம்; ஏனெனில் நாங்கள் இணையும்போது குர்ஆன், ஸுன்னா மட்டுமே எங்கள் மூலாதாரம் என்றுதானே கூறினார்கள். எனவே இவைகளைக் கதைத்துத் திருத்தி விடலாம் என்ற எண்ணத்தில் முஹம்மது இஸ்தியாக் இலங்கை வந்ததும் 5 பேர் கொண்ட உலமாக்கள் அவருடன் பேசினோம். உடனே அவருடன் இருந்த பாகிஸ்தானைச் சேர்ந்த செய்னுல் ஆப்தீன் என்பவரைப் பார்த்து, ‘‘பாகிஸ்தான் சென்றதும் இவைகளை கிதாபிலிருந்து அகற்றிவிட வேண்டும்’’ என்று கட்டளையிட்டார். விடயம் முடிந்து விட்டது என்று நாங்கள் நம்பி இருந்தோம். ஆனால் அவைகளை அவர் திருத்தவுமில்லை; அவர் திருந்தவும் இல்லை. அதுமட்டுமன்றி நோன்புப் பெருநாள் தினத்தில் அவர்களுடைய இணைய தளத்தில் ‘‘தகப்பலல்லாஹு மின்னா வமின்க’’ என்ற துஆவைப் போட்டார்கள். இவர் இலங்கை வந்தபோது கேட்டதும், எனக்குத் தெரியாமல் போட்டுள்ளார்கள், போய் விசாரிக்கின்றேன்’’ என்று கூறினார். பிறகு மீண்டும் ஹஜ்ஜுப் பெருநாளைக்கும் அந்த துஆவைப் போட்டார்கள். இது மாத்திரமன்றி பித்அத்துக்களைச் செய்ய வேண்டும் என்று கட்டளையும் இட்டார். உடனே இலங்கையில் உள்ள 32 கிளைகளின் அமீர்மார்கள், உலமாக்கள் அனைவரையும் அழைத்து ஒரு ஸூரா செய்தோம். அதில் 3 மாதங்கள் வரை பொறுத்திருப்போம்; அதற்குள் முஹம்மது இஸ்தியாக் மேற்கூறப்பட்டவைகள் மார்க்கத்தில் உள்ளவைகள் அல்ல என்று பகிரங்கமாக வாபஸ் வாங்கினால் இணைந்து செயற்படுவோம். வாபஸ் வாங்காவிட்டால், அது ஒரு பிரிவாகவே கருதப்பட வேண்டும் என்று முடிவெடுத்து, பாகிஸ்தானுடன் தொடர்பு கொண்டோம். இறுதியாக அவர் கூறிய விடயம் என்னவெனில், ‘‘நாங்கள் மஸ்ஊத் அஹ்மதின் அகீதாவையே பின்பற்றுவோம்; அதில் எந்த மாற்றமும் செய்யமாட்டோம். மின்ஹாஜுல் முஸ்லிமீனிலும் எந்த மாற்றமும் செய்யமாட்டோம்’’ என்பதாகும். இந்த தகவலைத் தந்ததும், பாகிஸ்தானிய அமைப்பானது, அது ஜமாஅதுல் முஸ்லிமீன் அல்ல. அதுவும் ஏனைய பிரிவுகளைப் போல் ஒரு பிரிவேயாகும் என்று முடிவெடுத்தோம். பிரிவிலிருந்து ஒதுங்கும்படி நபி ﷺ அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள் என்ற அடிப்படையில் நாங்கள் அதிலிருந்து ஒதுங்கி, இங்கு 1990ல் ஆரம்பித்த அசல் ஜமாஅதுல் முஸ்லிமீனில் இப்போதும் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றோம். நாங்கள் 1990ல் பயணிக்க ஆரம்பித்த இந்த நேரான பாதையில், நாங்களும் உங்களைப் போன்ற கொள்கையுடையவர்கள் என்று கூறி, எங்களுடன் குறுக்கு வழியால் வந்து இணைத்துக் கொண்டவர்களை கழற்றி விட்டு, அல்லாஹ்வின் உதவியினால் தொடர்ந்தும் அந்த நேரான பாதையில் சென்று கொண்டிருக் கின்றோம்.

உலகில் குர்ஆன், ஹதீஸ் அதாவது வஹியை மாத்திரம் பின்பற்றிக் கொண்டு ஷிர்க், பித்அத்தை ஒழிக்கும் ஒரு கூட்டம் இருக்குமென்றால், அது இலங்கையைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் ஜமாஅதுல் முஸ்லிமீன் மாத்திரமே! ஒருவர் சுவனம் நுழைய விரும்பினால், இந்த ஜமாஅத்தில் பைஅத் செய்ய வேண்டும் என்று பகிரங்கமாக முழு உலகிற்கும் குரல் கொடுக்கின்றோம். இதனைக் கண்ட முஹம்மது இஸ்தியாக் என்பவர் இதில் உள்ளவர்களை வழிகெடுக்கும் நோக்கில் ‘‘இஜ்மாஉஸ் ஸஹாபாகே ஹுஜ்ஜத் ஹோனே கே தலாயில்’’ என்ற பெயரில் ஒரு நூல் எழுதி வெளியிட்டுள்ளார். இந்த நூலை

எங்களிடம் சமர்ப்பித்து இதற்கு சரியான ஒரு விடை தரவேண்டும் என சிலர் வேண்டிக் கொண்டதற்கிணங்க, அந்நூலில் உள்ள பிழைகளை இங்கே சுட்டிக் காட்டவுள்ளோம்.

வாசகர்கள் இதனைக் கவனமாகப் படித்து, அப்பிரிவிலிருந்து ஒதுங்கி இச்சத்தியத்தில் இணைந்து தங்களை நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

“இஜ்மாஉஸ் ஸஹாபாகே ஹுதிஜ்ஜத் ஹோனே கே தலாயில்” எனும் நூலில் காணப்படும் விடயங்கள் பின்வருமாறு :

**01. இஜ்மாஉஸ் ஸஹாபாவும் மார்க்கமாகும் :**

இஜ்மாஉஸ் ஸஹாபாவும் மார்க்கத்திலுள்ளதாகும் என்பது முஹம்மது இஸ்தியாக் அவர்களின் வாதமாகும். இதற்கு ஆதாரமாக அல்குர்ஆனிலிருந்து 04 : 115வது வசனத்தை ஆதாரமாகக் காட்டியுள்ளார்.

وَمَنْ يُشَاقِقِ الرَّسُولَ مِنْ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُ الْهُدَى وَيَتَّبِعْ غَيْرَ سَبِيلِ الْمُؤْمِنِينَ نُوَلِّهِ مَا تَوَلَّى وَنُصْلِهِ جَهَنَّمَ وَسَاءَتْ مَصِيرًا (النساء: 115)

இந்த வசனத்தில் “**யார் விசுவாசிகளின் பாதையல்லாததை பின்பற்றுகின்றாரோ, அவர் நரகம் செல்வார்**” (சுருக்கம் ) என்று காணப்படுகின்றது.

இஜ்மாஉஸ் ஸஹாபா மார்க்கம் என்பதற்கு மேற்கூறிய அல்குர்ஆன் வசனத்தை ஆதாரமாகக் கொண்டு வந்து விட்டு, இப்னு கதீர், இப்னு ஹஜர், கஸ்ஸாப் போன்ற முபஸ்ஸிரீன்களின் கூற்றுக்களைக் கொண்டு வந்து, இவர்களும் இந்த அல்குர்ஆன் வசனத்திலிருந்து இஜ்மாஉஸ் ஸஹாபா மார்க்கம் என்று கூறுகின்றார்கள் என்ற வாதத்தை முன்வைக்கின்றார்.

இதற்கு நாங்கள் கீழே முன்வைக்கும் மறுப்புக்களைப் படிப்பதற்கு முன்னர்; அவருடைய நூலைப் படிக்குமாறு வாசகர்களை நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

i) இந்த 04 : 115 அல்குர்ஆனிய வசனத்தில் إجماع الصحابة என்ற வாசகம் காணப்படுகின்றதா? இல்லை.

ii) இந்த வசனத்தில் “மு.ஃ.மின்களின் பாதை” என்றுதான் காணப்படுகின்றதே தவிர, ஸஹாபாக்களின் பாதை என்று காணப்படவில்லை.

iii) “மு.ஃ.மின்களின் பாதை” என்பதில் ஸஹாபாக்கள், தாபியீன்கள், தபஉத்தாபியீன்கள், நான்கு இமாம்கள் மற்றும் மறுமை நாள் வரை வரக்கூடிய அனைத்து மு.ஃ.மின்களும் உள்வாங்கப்படுவர். அப்படியென்றால் இவர்கள் அனைவரையும் அல்லவா பின்னபற்ற வேண்டும்? இவர்கள் அனைவரையும் தள்ளிவிட்டு ஸஹாபாக்களின் பாதையை மட்டும் ஏன் முஹம்மது இஸ்தியாக் எடுக்க வேண்டும்?

ஏனைய பிரிவுகளும் மத்ஹபுகளும் இதனைத்தானே செய்கின்றார்கள். மத்ஹபுகள் ஸஹாபாக்களின் பாதையை மட்டும் எடுப்பதில்லையே. தாபியீன்கள், தபஉத்தாபியீன்களின் பாதைகளையும் அல்லவா எடுக்கின்றார்கள். அப்படியானால் மத்ஹபுகளை எப்படி வழிகேடுகள் என்று கூறுவார்கள்? இந்த வசனத்தில் ஸஹாபாக்களின் பாதை மட்டுமே சரியானது என்று காணப்படவில்லையே!

iv) மேற்கூறப்பட்ட முபஸ்ஸிரீன்களின் கூற்றை முஹம்மது இஸ்தியாக் எப்படி முன்வைப்பார்? மஸ்ஊத் அஹ்மத் தனது “ஜமாஅதுல் முஸ்லிமீன் அப்னீ த.ஃ.வத் ஓர் தஹ்ரீகே ஆயினாமே” என்ற நூலில் “குர்ஆனுக்கு யார் விளக்கம் கொடுக்கின்றாரோ, அவர் காபிராவார்“ என்றல்லவா கூறுகின்றார்.

முபஸ்ஸிரீன்களின் விளக்கத்தைத் தனது நூலில் கொண்டு வந்திருப்பது மஸ்ஊத் அஹ்மதின் கொள்கைக்கு மாற்றம் இல்லையா?

v) இந்த அல்குர்ஆனிய வசனத்தில் ஸஹாபாக்களின்பாதை மார்க்கம் என்று தெளிவாக இருந்தால், முபஸ்ஸிரீன்களின் விளக்கங்களை ஏன் கொண்டு வர வேண்டும்? அல்குர்ஆனிய வசனத்திலிருந்து தனது கொள்கையை நிறுவ முடியாத காரணத்தினால்தானே முபஸ்ஸிரீன்களின் விளக்கங்களைக் கொண்டு வந்திருக் கின்றார்.

vi) இந்த 04 : 115 வசனத்தில் ஸஹாபாக்களின் பாதையைப் பின்பற்றும்படி அல்குர்ஆன் கூறுகின்றதே தவிர, ஸஹாபாக்களைப் பின்பற்றும்படிக் கூறவில்லை.

நாம் முஹம்மது இஸ்தியாக்கிடம் கேட்கின்றோம்; “ஸஹாபாக்களின் பாதை என்ன?“ அதற்கு அவரது பதில், “அல்குர்ஆனும் ஹதீஸுும்“ என்பதாகும்.

இந்த அடிப்படையில் ஸஹாபாக்கள், தாபியீன்கள், தபஉத்தாபியீன்கள், இமாம்கள், மறுமை வரை வரக்கூடிய அனைத்து மு.ஃ.மின்களினதும் பாதை அல்குர்ஆனும் ஹதீஸுமாகும். அதாவது வஹி மாத்திரமேயாகும். எனவே ஸஹாபாக்களை மாத்திரம் மட்டிடாது, மறுமை நாள் வரும்வரை வரக்கூடிய அனைத்து மு.ஃ.மின்களிதும் பாதையை நாம் பின்பற்ற வேண்டும் என்றல்லவா

அல்குர்ஆன் கூறுகின்றது. அந்தப் பாதை குர்ஆனும் ஹதீஸுமாகிய வஹி மாத்திரமே!

முஹம்மது இஸ்தியாக்கின் கூற்றுப்படி ஸஹாபாக்களைத் தவிரவுள்ளவர்களைப் புறந்தள்ளிவிட்டு, இந்த அல்குர்ஆனிய வசனம் ஸஹாபாக்களை மட்டுமே உள்வாங்குகிறது என்று கூறுவது எவ்வளவு பிழையான வாதம் என்பதனை வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நபி ﷺ அவர்கள் மூன்று நூற்றாண்டுகளை சிறந்த காலம் என்று கூறுகின்றார்கள். இந்த சிறந்த காலத்தினுள் தாபியீன்களும் தபஉத்தாபியீன்களும் அடங்குவர். அப்படியானால் அவர்களின் சொல், செயல், அங்கீகாரத்தையும் எடுக்க வேண்டி வரும்.

எனவேதான் வசனத்தை மீண்டும் ஒருமுறை பாருங்கள். விசுவாசிகளின் பாதையைப் பின்பற்றும்படி அல்லாஹ் கூறுகின்றானே தவிர, விசுவாசிகளைப் பின்பற்றும்படிக் கூறவில்லை. விசுவாசிகளின் பாதை அல்குர்ஆனும் ஸுன்னாவுமாகும்.

முஹம்மது இஸ்தியாக் தவ்பாச் செய்து, எமது இந்த சத்தியக் கொள்கையை ஏற்று பைஅத் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், ஸஹாபாக்களை மட்டுமல்லாது மு.்.மின்கள் அனைவரையும் பின்பற்றும் கொள்கைக்கு அவர் மாற வேண்டும். அதுதான் பிரிவுகள், மற்றும் மத்ஹபுகளின் கொள்கை என்பதனை உலகமறிந்த விடயம்.

எனவே இதன் சுருக்கம் யாதெனில், இந்த அல்குர்ஆனிய வசனம் இறங்கும்போது மு.்.மின்களின் பாதையாக அல்குர்ஆனும் ஸுனனாவும் மாத்திரமே காணப்பட்டன. அல்குர்ஆன், அஸ்ஸுன்னா ஆகிய இரண்டு மாத்திரமே வஹியாகும்.

நபி ﷺ அவர்கள் உயிரோடு இருக்கும்போது, அல்லாஹுத்தஆலா :

اتَّبِعُوا مَا أُنْزِلَ إِلَيْكُمْ مِنْ رَبِّكُمْ وَلَا تَتَّبِعُوا مِنْ دُونِهِ أَوْلِيَاءَ قَلِيلًا مَا تَذَكَّرُونَ (الأعراف: 3)

“**உங்களுக்கு வஹி மூலம் இறக்கப்பட்ட தைப் பின்பற்றுங்கள்**!” (அல்குர்ஆன் 07:03)

إِنْ أَتَّبِعُ إِلَّا مَا يُوحَى إِلَيَّ (الأنعام: 50)

“**வஹி மூலம் இறக்கப்பட்டதைத் தவிர, வேறெதனையும் நான் பின்பற்றமாட்டேன் என்று நபியே நீர் கூறுவீராக**” ( அல்குர்ஆன் 06 : 50 )

ஆகவே நபி ﷺ அவர்கள் வபாத்தாகும் முன்னர் உயிரோடு இருக்கும்போதும் அவர்களின் பாதை குர்ஆன், ஸுன்னா மாத்திரமே! நபி ﷺ அவர்களின் வபாத்திற்கு பின்னரும் எமது பாதை குர்ஆன், ஸுன்னா ஆகிய இரண்டு மாத்திரமே!

இஜ்மாஉஸ் ஸஹாபா என்று சொல்லக் கூடிய ஸஹாபாக்களின் சொல், செயல், அங்கீகாரம் இவைகளை மார்க்கமாகப் பின்பற்ற வேண்டும் என்று எடுத்தால், முதலில் அதற்கு குர்ஆன், ஸுன்னாவிலிருந்து ஆதாரம் காட்ட வேண்டும். இரண்டாவதாக இஜ்மாஉஸ் ஸஹாபாவை மார்க்கமாக எடுத்தால், இஸ்லாத்தின் அடிப்படைகள் பல தகர்க்கப்பட்டு விடும்.

உதாரணமாக :

I) பைஅத்தை முறித்தால் அவர் முர்தத் என்பது குர்ஆன், ஸுன்னாவின் தீர்ப்பாகும். ஆனால் இஜ்மாஉஸ் ஸஹாபாவில் அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் ؓ அவர்கள் யஸீத் ؓ அவர்களின் பைஅத்தை முறித்தார் என்று வந்துள்ளது.

ii) இஸ்லாத்தில் ஒரு கூட்டமே சத்தியத்தில் இருக்கும் என்று வந்துள்ளது. ஆனால் இஜ்மாஉஸ் ஸஹாபாவில் அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் ؓ கலீபாவுக்கு எதிராக மக்காவில் இன்னுமொரு ஜமாஅத்தை உருவாக்கினார் என்று வந்துள்ளது.

iii) இஜ்மாஉஸ் ஸஹாபாவை மார்க்கமாக நாம் எடுத்தால், பிரிவுகளுக்கு மேலேயுள்ள இரண்டு விடயங்களுடன் இன்னும் பல விடயங்களும் ஆதாரங்களாகி விடும். அதாவது ஜமாஅத்தை விட்டுப் பிரிந்து இன்னுமொரு ஜமாஅத்தை உருவாக்கிய அந்த ஸஹாபியும் முஸ்லிம்தானே! எனவே பிரிந்திருந்தாலும், பைஅத்தை முறித்தாலும் முஸ்லிமாக இருக்கலாம் என்பதாகிவிடும். அதேபோன்று இரண்டு ஜமாஅத்துக்கள் சமகாலத்தில் இருக்கலாம் என்றாகிவிடும். ஆகவே இக்காலத்தில் பைஅத் இல்லாமல் பல ஜமாஅத்துக்கள் இருப்பதும் இஸ்லாமே என்றாகிவிடும்.

ஆனால் மேலேயுள்ள இரண்டு சம்பவங்களும் குர்ஆன், ஹதீஸ் அல்ல. இவைகளைப் பாதுகாப்பதாக அல்லாஹுத்தஆலா பொறுப்பெடுக்கவுமில்லை. வரலாறுகள் எழுதப்பட்ட தெல்லாம் அப்பாஸியாக்களின் ஆட்சி காலத்திலாகும். எனவே மேலேயுள்ள அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் ؓ அவர்களின் சம்பவத்தை நாங்கள் ஒருபோதும் நம்பக் கூடாது. நன்மாராயங் கூறப்பட்ட ஸஹாபாக்கள் ஒருபோதும் பைஅத்தை முறிப்பது, புதியதொரு ஜமாஅத்தை உருவாக்குவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடவேமாட்டார்கள் என்று நம்புவதே ஒரு முஸ்லிமின் கொள்கையாகும்.

இந்த சம்பவத்தை நம்பி, மஸ்ஊத் அஹ்மத் தனது “தாரீஹுல் இஸ்லாம் - இஸ்லாத்தின் உண்மை வரலாறு” எனும் நூலில் ????????? ம் பக்கத்தில் இந்த

வரலாற்றை எழுதியுள்ளார். இவரது அகீதாவும் அதுதான் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

இதில் முக்கியமாக நாம் புரிய வேண்டியது, மஸ்ஊத் அஹ்மத் ''ஜமாஅதுல் முஸ்லிமீன் அப்னீ த.்.வத் ஓர் தஹ்ரீகே ஆயினாமே'' எனும் நூலில் 536ம் பக்கத்தில் ''இஜ்மாஉஸ் ஸஹாபாவைப் பின்பற்றுகின்ற காரணத்தினால் அஹ்லுல் ஹதீஸ் எனும் பிரிவினர் வழிகேட்டில் இருக்கின்றனர்'' என்று எழுதியுள்ள கொள்கைக்கு முரணாக, முஹம்மது இஸ்தியாக் இந்த தனது நூலில் ''இஜ்மாஉஸ் ஸஹாபா மார்க்கம்'' என்று எழுதி மஸ்ஊத் அஹ்மதிற்கு மாறு செய்துள்ளார்.

மஸ்ஊத் அஹ்மத் தனக்குத்தானே முரண்பட்டு, ''இஜ்மாஉஸ் ஸஹாபாவைப் பின்பற்றாதவர்கள் காபிர்கள்'' என்று இதே நூலில் 30ம் பக்கத்தில் எழுதியுள்ளது இரண்டாவது விடயம்.

ii) எனது உம்மத் 73ஆகப் பிரியும் என்ற ஹதீஸின் இறுதியில் ஒரு கூட்டமே சுவனம் நுழையும் என்று கூறியபோது ஸஹாபாக்கள் ''அல்லாஹ்வின் தூதரே! அந்தக் கூட்டம் எது?'' என்று கேட்டதற்கு, நபி ﷺ அவர்கள் '' ما انا عليه وأصحابي **நானும் எனது தோழர்களும் எதில் இருக்கின்றோமோ, அது**'' என்று கூறினார்கள்.

இந்த ஹதீஸைக் கொண்டு வந்து இது ஹஸன் தரத்தில் இருப்பதாக எழுதியுள்ளார். இந்த ஹதீஸை நாங்கள் மறுக்கவுமில்லை; ஹஸன் தரத்தில் இல்லை என்று கூறவுமில்லை. அப்படியானால் ஏன் இந்த ஹதீஸை இங்கு கொண்டு வந்தார் என்று புரியவில்லை.

இந்த ஹதீஸில் இஜ்மாஉஸ் ஸஹாபா மார்க்கம் என்று ஒரு வாசகமும் இல்லை. மாறாக குர்ஆன், ஹதீஸ் மாத்திரமே மார்க்கம் என்பதனை வலியுறுத்துவதாகவே இந்த ஹதீஸ் அமைந்துள்ளதை நன்கு கவனிப்பவர்கள் புரிந்து கொள்வர்.

இந்த ஹதீஸில் ''நானும் எனது தோழர்களும் எதில் இருக்கின்றோமோ, அந்த ஒன்றில் இருப்பவர்கள் சுவனம்'' என்று வந்துள்ளது. அந்த ஒன்று எது? அதற்கு இந்த ஹதீஸில் مَا என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த مَا என்ற சொல் இரண்டு கருத்துக்களைக் கொண்டிருக்கின்றது. ஒன்று ''வழி'' என்ற கருத்தாகும் அதாவது நானும் எனது தோழர்களும் இருக்கும் வழி - ஸபீல் எனப்படும். இரண்டாவது ''கொள்கை''. அதாவது நானும் எனது தோழர்களும் இருக்கக் கூடிய கொள்கை.

இந்த இரண்டு கருத்துக்களை எடுத்துக் கொண்டாலும் 01. நானும் எனது தோழர்களும் இருக்கக் கூடிய வழி 02. நானும் எனது தோழர்களும் செல்லக் கூடிய கொள்கை ஆகிய இரண்டும் ஒன்றே. நபி ﷺ அவர்களும் ஸஹாபாக்களும்

இருக்கக் கூடிய கொள்கை, வழி அல்லாஹ்வின் வஹியாகிய குர்ஆனும் ஸுன்னாவுமாகும். ஆகவே ஸஹாபாக்களினது வழியையும் கொள்கையையும் பின்பற்றுமாறு இந்த ஹதீஸ் கூறுகிறது. இதனைத்தான் நாங்களும் கூறுகின்றோம். ஸஹாபாக்களைப் பின்பற்றாது, அவர்களின் பாதையையும் கொள்கையையும் பின்பற்றுங்கள் என்று.

இந்த ஹதீஸ் இஜ்மாஉஸ் ஸஹாபாவைப் பின்பற்ற வேண்டும் என்று கூறுபவர்களுக்கு எதிராகவும், அதனைப் பின்பற்றக்கூடாது என்று கூறுபவர்களுக்கு ஆதாரமாகவும் அமைந்துள்ளதைக் காணலாம்.

வாசகர்களே! இஸ்லாத்தின் மூலாதாரம் குர்ஆனும் ஹதீஸுமாகும். குர்ஆன் என்பது யாவருக்கும் தெரிந்த விடயம். ஹதீஸ் என்பது நபி ﷺ அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் மட்டுமேயாகும்.

எனவே நபி ﷺ அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் மட்டுமே மார்க்கமாகுமே ஒழிய, ஸஹாபாக்களின் சொல், செயல், அங்கீகாரம் எப்படி மார்க்கமாக அமையும்? சற்று சிந்தியுங்கள்.

**02. முஹம்மது இஸ்தியாக் தனது வாதத்தை நிறுவுவதற்கு முன்வைக்கும் மற்றுமொரு ஆதாரம் :** ( பக்கம் : 06 )

أَنَا وَأَصْحَابِي حَيِّزٌ وَالنَّاسُ حَيِّزٌ لَا هِجْرَةَ بَعْدَ الْفَتْحِ مسند أبي داود الطيالسي - 1/ 494 - 602

**நானும் எனது தோழர்களும் (வழி) நடாத்துபவர்கள். மக்கள் நடப்பவர்கள். (மக்கா) வெற்றிக்குப் பின் ஹிஜ்ரத் இல்லை.**

இது நீண்ட ஒரு ஹதீஸின் ஒரு பகுதியாகும். இது அஹ்மதில் 11167ம் இலக்கத்தில் பதியப்பட்டுள்ளது. இதை மக்கா வெற்றிக்குப் பின் கூறியதாக அஹ்மதில் வந்துள்ளது. மக்கள் நடப்பவர்கள் என்பதன் பொருள் மக்கா வெற்றிக்குப் பின் இஸ்லாத்தை ஏற்றவர்கள் என்பதாகும். அதாவது ‘‘எனக்கும் தோழர்களுக்கும் ஹிஜ்ரத்தின் சிறப்புக் கிடைத்துள்ளது. மக்கா வெற்றிக்குப் பின் இஸ்லாத்தை ஏற்றவர்களுக்கு ஹிஜ்ரத்தின் சிறப்பு இல்லை. இருந்தாலும் அவர்களுக்கும் இஸ்லாத்தை ஏற்ற சிறப்புக் கிடைத்துள்ளது.’’

ஆனால் இந்த ஹதீஸில் ஸஹாபாக்களின் சொல், செயல், அங்கீகாரம் மார்க்கம் என்று வரவில்லை. இஜ்மாஉஸ் ஸஹாபாவைப் பின்பற்ற அதில் எவ்வித ஆதாரமுமில்லை. இஜ்மாஉஸ் ஸஹாபாவைப் பின்பற்றுவதற்கு ஆதாரமாக இந்த ஹதீஸைக் கொண்டு வந்தது அர்த்தமற்ற தாகும்.

அடுத்ததாக இந்த ஹதீஸ் ஸஹீஹான ஹதீஸும் அல்ல. இது பலயீனமான ஹதீஸ் என்று அர்னஊத் என்பவர் முஸ்னத் அஹ்மதில் 11167ம் இலக்க ஹதீஸின் கீழே பின்வருமாறு கூறுகின்றார் :-- இந்த ஹதீஸில் வரக்கூடிய “ انا وأصحابي حيز ”என்ற வாசகம் பலயீனமானதாகும். இதன் அறிவிப்பாளர் வரிசையில் அபூபக்தரி என்பவர் காணப்படுகின்றார். இவர் அபூ ஸயீத் ﵁ என்பவரிடத்தில் எதையுமே கேட்டதில்லை. எனவே இது அறிவிப்பாளர் தொடர் அறுபட்ட “முன்கதி∴” ஆகும்.

முஸ்னத் அஹ்மதில் அர்னஊத் கூறிய மேற்படி விடயத்தை “இதன் ஸனத் ஸஹீஹ்” என்று முஹம்மது இஸ்தியாக் கூறிவிட்டார் என்பதனை வாசகர்கள் கவனிக்கவும். மேலும் தஹ்தீபுல் கமால் என்ற நூலில் அபூதாவூத் கூறியதாக வந்துள்ள விடயம் பின்வருமாறு :

இந்த பக்தரி அல்லது பைரூஸ் என்பவர் ஸஹாபாக்களிடம் கேட்டதாகக் கூறுகின்றார். ஆனால் அதிகமான நபித்தோழர்களிடத்தில் அவர் கேட்கவில்லை. அவரின் ஊர்வாசிகளிடம் கேட்டது ஹதீஸ். வெளியில் கேட்டது பலயீனமாகும். மொத்தத்தில் இவர் அபூஸயீத் வ அவர்களிடம் எதையும் கேட்கவேயில்லை.

எனவே இது ஹதீஸ் அல்ல. ஸஹாபாக்களைப் பற்றி இதில் எந்த ஆதாரமும் இல்லை.

**03. முஹம்மது இஸ்தியாக் தனது வாதத்தை நிறுவுவதற்கு முன்வைக்கும் மற்றுமொரு ஆதாரம் :**

إِنَّ اللَّهَ أَجَارَكُمْ مِنْ ثَلَاثِ خِلَالٍ: أَنْ لَا يَدْعُوَ عَلَيْكُمْ نَبِيُّكُمْ فَتَهْلَكُوا جَمِيعًا، وَأَنْ لَا يَظْهَرَ أَهْلُ الْبَاطِلِ عَلَى أَهْلِ الْحَقِّ، وَأَنْ لَا تَجْتَمِعُوا عَلَى ضَلَالَةٍ سنن أبي داود - 4/ 98 - 4253

**அல்லாஹுத்தஆலா உங்களை மூன்று விடயங்களிலிருந்து பாதுகாத்துள்ளான்.**

**01. உங்களது நபி உங்களுக்கு எதிராகப் பிரார்த்தித்து நீங்கள் அழிந்து விடமாட்டீர்கள்.**

**02. அசத்தியவாதிகள் சத்தியவாதிகள்மீது வெற்றி கொள்ளமாட்டார்கள்.**

**03. நீங்கள் அனைவரும் வழிகேட்டில் ஒன்று சேரமாட்டீர்கள்.** ( அபூதாவுத் )

இஜ்மாஉஸ் ஸஹாபாவைப் பின்பற்ற இது ஆதாரம் என்று முஹம்மது இஸ்தியாக் கூறுகின்றார். இந்த ஹதீஸில் ‘இஜ்மாஉஸ் ஸஹாபா’ என்ற ஒரு சொல் இல்லை. ஸஹாபாக்களைப் பின்பற்றும்படி அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறவுமில்லை. மாறாக ஸஹாபாக்கள் வழிகேட்டில் செல்லமாட்டார்கள் என்றுதான் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்.

இதனைத்தான் நாங்களும் கூறுகின்றோம். ஸஹாபாக்கள் ஷிர்க், பித்அத், குப்ர், ஜாஹிலிய்யத் போன்றவைகளில் ஈடுபடமாட்டார்கள். அவர்கள் குர்ஆன், ஸுன்னாவை மட்டுமே பின்பற்றுவார்கள். அவர்களைப் பற்றி வந்துள்ள குர்ஆன், ஸுன்னாவுக்கு மாற்றமான விடயங்களை ஒரு முஸ்லிம் நம்பவே கூடாது. உதாரணமாக :

01. உமர் ﷺ அவர்கள் முத்தலாக்கைக் கூடுமாக்கியது.

02. உதுமான் ﷺ அவர்கள் பிரயாணத்தில் 4 ரக்அத்துக்கள் தொழுதது.

03. நபி ﷺ அவர்களின் வபாத்திற்குப் பிறகு ஸஹாபாக்கள் அத்தஹிய்யாத்து ஓதும்போது, ‘அஸ்ஸலாமு அலைக’ என்பதற்கு பதிலாக ‘அஸ்ஸலாமு அலைஹி’ என்று ஓதியது.

04. ‘ஸூரத்துல் பலக், ஸூரத்துந் நாஸ் ஆகிய இரண்டும் குர்ஆனில் உள்ளது அல்ல’ என்று இப்னு மஸ்ஊத் சுரண்டி எடுத்தது.

05. அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் ﷺ அவர்கள் கலீபா யஸீத் ﷺ அவர்களின் பைஅத்தை முறித்தது. அத்துடன் ஒரு ஜமாஅத் இருக்கும்போதே இன்னொரு ஜமாஅத்தை உருவாக்கியது.

06. பெருநாள் தினத்தில் ‘தகப்பலல்லாஹு மின்னா வமின்க’ என்று ஓதுதல்.

07. பெருநாள் தினத்தில் குளித்தல்.

08. பெண் இமாமத் செய்யும்போது ஸப்பின் நடுவில் நிற்றல்.

09. தொழுகைக்காக ‘ஸப்’ சரி செய்யும்போது கையில் தடி எடுத்தல்.

போன்ற அனைத்தும் குர்ஆன், ஸுன்னாவில் இல்லாதவைகளாகும். இவைகளை ஸஹாபாக்கள் செய்திருக்கவேமாட்டார்கள் என்று நாங்கள் கூறுகின்றோம். நாங்கள்தான் ஸஹாபாக்களைத் தூய்மைப்படுத்துகின்றோம்.

ஆனால் முஹம்மது இஸ்தியாக் ஸஹாபாக்கள் குர்ஆன், ஸுன்னாவுக்கு மாற்றமாக செயற்பட்டார்கள் என்று கூறி அவர்களை இழிவுபடுத்துகின்றார். அதாவது உமர் ﷺ அவர்கள் முத்தலாக்கை அனுமதித்தார். இது குர்ஆன், ஹதீஸுக்கு முரணானது. எனவே நாங்கள் அதனை எடுக்கமாட்டோம் என்று கூறுகின்றார். அப்படியானால் ஸஹாபாக்கள் குர்ஆன், ஸுன்னாவுக்கு மாற்றமாக செயற்பட்டார்களா? ஸஹாபாக்கள் குர்ஆன், ஸுன்னாவுக்கு மாற்றமாக செயற்பட்டார்கள் என்று கூறி அவர்களை இழிவுபடுத்துபவர்கள் யார்?

உதுமான் ﷺ பிரயாணத்தில் நான்கு ரக்அத்துக்கள் தொழுது பித்அத்தைச் செய்தார்களா? வெள்ளிக்கிழமையில் இரண்டு அதான் கூறி பித்அத்தைச் செய்தார்களா? இல்லை; அப்படி ஒரு செயல் நடைபெறவே இல்லை என்கின்றோம். ஆனால் முஹம்மது இஸ்தியாக் இவைகள் அன்று நடந்துள்ளது. இருந்தும் குர்ஆன், ஸுன்னாவுக்கு மாற்றமாக இருப்பதால், நாங்கள் அவைகளை

எடுப்பதில்லை என்று கூறி, ஸஹாபாக்களை பித்அத்வாதிகளாகக் கருதுகின்றார். நஊதுபில்லாஹி மின்ஹா. நாங்கள் அவ்வாறு கூறமாட்டோம். நாங்கள் ஸஹாபாக்களைக் கண்ணியப்படுத்துகின்றோம்.

முக்கிய குறிப்பு : முஹம்மது இஸ்தியாக் இந்த ஹதீஸை இப்னு ஹஜர் தனது ''பத்ஹுல் பாரி'' என்ற நூலில் 'ஹஸன்' என்று கூறியுள்ளதாக எழுதியுள்ளார். அபூதாவுதிலும் வந்துள்ள ஹதீஸை வெறுமனே கூறியுள்ளார். ஆனால் அபூதாவுதில் வரக்கூடிய 4253ம் இலக்க இந்த ஹதீஸ் பலயீனமானது என்று அர்னஊத் கூறுகின்றார். அல்அஹாதீதுல் லயீபாவில் அல்பானி பின்வருமாறு கூறுகின்றார் : ''இப்னு ஹஜர் தஹ்தீபில் சுரைஹ் என்பவர் அபூ மாலிக்கிடம் கேட்கவில்லை. எனவே இது 'லயீப்' - தொடர் அறுபட்டதாகும். இதை இப்னு ஹஜர் மறந்து விட்டு ''பதலுல் மாஊன்'' என்ற நூலில் ஹஸன் என்று கூறிவிட்டார்.

இந்த ஹதீஸ் 'ஹஸன்' என்று கூறுபவர்கள் இதற்கு பக்க பலமாக கொண்டு வரும் அனைத்து செய்திகளும் பலயீனமானதாகும். இதனால் இது ஹஸன் தரத்தை அடையாது என்பதனை வாசகர்கள் நன்கு புரிந்து கொள்ளவும். இந்த ஹதீஸ் பலயீனமானதாக இருப்பதால், ஸஹாபாக்கள் வழிகேட்டில் சென்றிருப் பார்கள் என்று ஒரு முஸ்லிம் நம்பவே கூடாது. அவர்கள் நேர்வழியில்தான் இருந்தார்கள்.

இஜ்மாஉஸ் ஸஹாபா என்ற பெயரில் வரும் அனைத்து செய்திகளும் அல்லாஹ்வால் பாதுகாப்பதாக பொறுப்பு எடுக்கப்படவில்லை. எனவே நாம் ஸஹாபாக்களின்மீது வீண் சந்தேகம் கொள்ளாது, அந்த அனைத்து செய்திகளையும் புறந்தள்ளிவிட்டு குர்ஆன், ஸுன்னா இவ்விரண்டை மட்டும் பின்பற்ற வேண்டும் எனக் கூறுகிறோம்.

**04. முஹம்மது இஸ்தியாக் தனது வாதத்தை நிறுவுவதற்கு முன்வைக்கும் மற்றுமொரு ஆதாரம் :**

حَدَّثَنَا أَبُو بَكْرٍ، حَدَّثَنَا عَاصِمٌ، عَنْ زِرِّ بْنِ حُبَيْشٍ، عَنْ عَبْدِ اللهِ بْنِ مَسْعُودٍ، قَالَ: " إِنَّ اللهَ نَظَرَ فِي قُلُوبِ الْعِبَادِ، فَوَجَدَ قَلْبَ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ خَيْرَ قُلُوبِ الْعِبَادِ، فَاصْطَفَاهُ لِنَفْسِهِ، فَابْتَعَثَهُ بِرِسَالَتِهِ، ثُمَّ نَظَرَ فِي قُلُوبِ الْعِبَادِ بَعْدَ قَلْبِ مُحَمَّدٍ، فَوَجَدَ قُلُوبَ أَصْحَابِهِ خَيْرَ قُلُوبِ الْعِبَادِ، فَجَعَلَهُمْ وُزَرَاءَ نَبِيِّهِ، يُقَاتِلُونَ عَلَى دِينِهِ، فَمَا رَأَى الْمُسْلِمُونَ حَسَنًا، فَهُوَ عِنْدَ اللهِ حَسَنٌ، وَمَا رَأَوْا سَيِّئًا فَهُوَ عِنْدَ اللهِ سَيِّئٌ"

مسند أحمد ط الرسالة - 6/ 84 – 3600

**அல்லாஹ்வின் அடியார்களின் உள்ளங்களைப் பார்த்து முஹம்மது நபி ﷺ அவர்களுடைய உள்ளத்தை நல்லதாகக் அதைத் தேர்ந்தெடுத்தான். பிறகு அடியார்களின் உள்ளங்களைப் பார்த்து அவர்களின் தோழர்களின் உள்ளங்களைச் சிறந்ததாகக் கண்டு, அவர்களை தன் நபிக்கு அமைச்சர்களாக ஆக்கினான். அவர்கள் தங்கள் தீனுக்காகப் போராடுவார்கள். முஸ்லிம்கள் எதனை அழகாகக்**

**காண்கின்றார்களோ அது அல்லாஹ்விடம் அழகாக இருக்கும். முஸ்லிம்கள் எதைக் கெட்டதாகக் காண்கிறார்களோ அது அல்லாஹ்விடம் கெட்டதாகக் காணப்படும்.**

(அஹ்மத், தபரானி)

இது முஸ்னத் அஹ்மதில் 3600ம் இலக்கத்தில் பதிவாகியுள்ளது. இந்த செய்தியிலும் ஸஹாபாக்களின் சொல், செயல், அங்கீகாரம் ஆகியவைகளை மார்க்கமாக எடுத்துக் கொள்ளுங்கள் என்று நபி ﷺ அவர்கள் கூறவில்லை. இஜ்மாவைப் பற்றியும் எந்தவொரு வாசகமும் இல்லை.

மக்களை வழிகெடுக்கும் நோக்கில் முஹம்மது இஸ்தியாக் இது போன்ற விடயங்களைக் கொண்டு வந்து மக்களை ஏமாற்றுகிறார். வாசகர்கள் இந்த செய்தியை நன்கு பாருங்கள். இஜ்மாஉஸ் ஸஹாபாவைப் பின்பற்ற இதில் எந்தவொரு ஆதாரமும் காணப்படுகின்றதா? இதில் வந்திருக்கும் விடயங்கள் உண்மையே! அதாவது முஹம்மது நபி ﷺ அவர்கள் மிகச் சிறந்தவர்கள். ஸஹாபாக்களும் மிகச் சிறந்தவர்களே! அவர்கள் மார்க்கத்திற்காகப் போராடியதும் உண்மையே! இதனை யாரும் மறுக்கமாட்டார்கள். அப்படியானால் இதனை இவர் ஏன் இங்கு கொண்டு வந்தார்?

வாசகர்கள் முதலில் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இது ஹதீஸ் அல்ல. நபியவர்கள் இதனைக் கூறவுமில்லை. இது இப்னு மஸ்ஊதின் கூற்று என்றே எழுதுகின்றார்கள். இருந்தும் இதே செய்தி நபியவர்கள் கூறியதாகவும் வருகின்றது. அதில் அபூதாவுத், ஸுலைமான் என்ற இரு அறிவிப்பாளர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் பலயீனமானவர்கள் என்றும், மத்றூக் - தள்ளப்பட்டவர்கள் என்றும் புகாரி கூறுகின்றார். எனவே இது மர்பூ.ஃ.வான ஹதீஸ் அல்ல. ஒரு ஸஹாபியின் கூற்றான மவ்கூப் ஆகும்.

வாசகர்கள் முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில், இந்தச் செய்தியில் முஸ்லிம்கள் எதனை நல்லதாகக் கருதுகின்றார்களோ அது அல்லாஹ்விடம் நல்லதாகவே இருக்கும் என்று வந்துள்ளது. முஹம்மது இஸ்தியாக்கின் கருத்துப்படி ஸஹாபாக்களின் செயல்கள் வஹியாக இருக்கிறதென்றால், முத்தலாக் கூறியது, வெள்ளிக் கிழமை இரண்டு அதான் கூறுவது, பிரயாணத்தில் கஸ்ர் செய்யாமல் தொழுவது, ஒரு முஸ்லிமுடன் 6 மாதங்களுக்கு மேலாக கதைக்காமல் இருப்பது, போன்ற எத்தனையோ விடயங்களை ஸஹாபாக்கள் செய்ததாகத்தானே எழுதி வைத்துள்ளார்கள். அதனால் இவைகள் அனைத்தும் அல்லாஹ்விடம் சரியானதா? இதனை முஹம்மது இஸ்தியாக் செய்வாரா? இதில் முஸ்லிம்கள் என்ற வாசகமே வந்துள்ளது. இதன் பிரகாரம் பித்அத் என்ற ஒன்று இல்லாமலேயே போய்விடும்.

இந்த செய்தியை நாம் நம்பினால் பித்அத்துடைய வாசலை நாம் திறந்தவர்களாகவே கருதப்படுவோம். எனவே இது மர்பூவான ஹதீஸும் அல்ல;

இதனை இப்னு மஸ்ஊத் கூறியிருக்கவுமாட்டார்கள் என்றே முஸ்லிம்கள் நம்ப வேண்டும்.

**05. முஹம்மது இஸ்தியாக் தனது வாதத்தை நிறுவுவதற்கு முன்வைக்கும் மற்றுமொரு ஆதாரம் :**

لَا تَزَالُونَ بِخَيْرٍ مَا دَامَ فِيكُمْ مَنْ رَآنِي وَصَاحَبَنِي، وَاللَّهِ لَا تَزَالُونَ بِخَيْرٍ مَا دَامَ فِيكُمْ مَنْ رَأَى مَنْ رَآنِي وَصَاحَبَ مَنْ صَاحَبَنِي (مصنف ابن أبي شيبة - 6/ 405 – 32417)

**என்னைக் கண்டவரும் என்னோடு தோழமைக் கொண்டவரும் என்னைக் கண்டவரைக் கண்டவரும் அவரோடு தோழமைக் கொண்டவரும் உங்களில் இருக்கும் வரை நீங்கள் நலவில் இருப்பீர்கள்.** (பக்கம் : 10) ( இப்னு அபீஸைபா )

முஹம்மது இஸ்தியாக் இந்த ஹதீஸைக் கொண்டு வந்து மக்களை ஏமாற்றப் பார்க்கின்றார். ஏனெனில் இதில் இஜ்மா.'. என்ற சொல்லோ, அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்ற சொல்லோ கிடையாது. இது ஸஹாபாக்கள், தாபியீன்களின் சிறப்பைத்தான் காட்டுகின்றது. இந்தச் சிறப்பு அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் ஆகியவற்றைப் பின்பற்றுவதைத்தான் குறிக்கிறது என்று தவறாக முடிவெடுத்தால், இதில் தாபியீன்களையும் சேர்த்தல்லவா கூறப்பட்டுள்ளது. அப்படியானால் தாபியீன்களையும் சேர்த்தல்லவா பின்பற்ற வேண்டும்? இதற்கு முஹம்மது இஸ்தியாக் உடன்படுவாரா?

அதேநேரத்தில் இந்த ஹதீஸ் ஸஹாபாக்கள், தாபியீன்களின் பாதையைப் பின்பற்றுவதைக் குறிக்கிறது என்றால், அது உடன்பாடான விடயமே! ஏனெனில் அவர்களின் பாதை குர்ஆன், ஸுன்னாவாகவே இருந்தது.

எனவே முஹம்மது இஸ்தியாக் தன் வாதத்தை இந்த ஹதீஸ் மூலம் நிறுவ முடியாது என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

.

**06. முஹம்மது இஸ்தியாக் தனது வாதத்தை நிறுவுவதற்கு முன்வைக்கும் மற்றுமொரு ஆதாரம் :**

لَا تَسُبُّوا أَصْحَابِي، لَعَنَ اللَّهُ مَنْ سَبَّ أَصْحَابِي (المعجم الأوسط 5/ 94 – 4771 )

**எனது தோழர்களைத் திட்டாதீர்கள். யார் எனது தோழர்களைத் திட்டுகிறாரோ, அல்லாஹ் அவரை சபிக்கின்றான்.** (பக் : 10 )

இந்த ஹதீஸ் மூலம் முஹம்மது இஸ்தியாக் என்ன கூற வருகின்றார்? இதில் இஜ்மாஉஸ் ஸஹாபாவைப் பற்றி பேச்சே இல்லையே!

இன்று ஷீஆக்கள் நபித்தோழர்களைத் திட்டுவதைக் காண்கிறோம். இதேபோன்று நாம் ஸஹாபாக்களைத் திட்டக் கூடாது என்பதனை இந்த ஹதீஸ் காட்டுகின்றது.

முஹம்மது இஸ்தியாக் ஏதோ நாங்கள் ஸஹாபாக்களைத் திட்டுவது போன்று மக்களுக்குக் காட்டுவதற்கு இதனை இங்கு கொண்டு வந்துள்ளார். ஸஹாபாக்கள் ஷிர்க், குப்ர், பித்அத் போன்றவைகளைச் செய்யவேமாட்டார்கள் என்று உத்தரவாதமளிப்பவர்களில் சுவனம் செல்லும் கூட்டமாகிய, இலங்கையைத் தலைமையகமாகக் கொண்டுள்ள ஜமாஅதுல் முஸ்லிமீன் முதன்மையானதாகும்.

நபி ﷺ அவர்களைத் தொட்டும் வந்துள்ள செய்திகளைத் தவிர, ஸாபாக்களைத் தொட்டும் வந்துள்ள அனைத்து செய்திகளையும் மறுத்து ஸஹாபாக்களைத் தூய்மைப்படுத்துகின்றோம். ஆனால் உதுமான் ؓ இரண்டு அதான் சொன்னார், உதுமான் ؓ பிரயாணத்தில் நான்கு ரக்அத்துக்கள் தொழுதார்; உமர் ؓ அவர்கள் முத்தலாக்கை அனுமதித்தார்; உமர் ؓ அவர்கள் மதுபானம் குடித்தவருக்கு 80 கசையடிகள் அடித்தார் போன்ற செய்திகளைக் கொண்டு வந்து இவை குர்ஆன் ஸுன்னாவுக்கு மாற்றமானது என்று முஹம்மது இஸ்தியாக் ஸஹாபாக்களின்மீது சூசகமாகக் குற்றம் சாட்டி, அவர்களின் தூய்மைக்குக் கலங்கம் விளைவித்து, அவர்களைக் குறை கூறுகின்றார் என்பது தெளிவாகின்றது.

ஆகவே இந்த ஹதீஸின் பிரகாரம் ஸஹாபாக்களைத் திட்டாது, அவர்கள் மேல் களங்கத்தை ஏற்படுத்தாமலிருப்பவர்கள் இலங்கை ஜமாஅதுல் முஸ்லிமீனே. மாறாக முஹம்மது இஸ்தியாக் அல்ல.

**07. முஹம்மது இஸ்தியாக் தனது வாதத்தை நிறுவுவதற்கு முன்வைக்கும் மற்றுமொரு ஆதாரம் :** (பக் : 01)

إِنَّ اللَّهَ اخْتَارَ أَصْحَابِي عَلَى الْعَالَمِينَ سِوَى النَّبِيِّينَ وَالْمُرْسَلِينَ، وَاخْتَارَ لِي مِنْ أَصْحَابِي أَرْبَعَةً " أَبَا بَكْرٍ، وَعُمَرَ، وَعُثْمَانَ، وَعَلِيًّا - رَحِمَهُمُ اللَّهُ - " فَجَعَلَهُمْ أَصْحَابِي ". وَقَالَ: " فِي أَصْحَابِي كُلِّهِمْ خَيْرٌ، وَاخْتَارَ أُمَّتِي عَلَى الْأُمَمِ، وَاخْتَارَ مِنْ أُمَّتِي أَرْبَعَةَ قُرُونٍ: الْقَرْنَ الْأَوَّلَ، وَالثَّانِيَ، وَالثَّالِثَ، وَالرَّابِعَ
(مجمع الزوائد ومنبع الفوائد (10/ 16 – 16383 )

**நிச்சயமாக அல்லாஹ் எனது தோழர்களை உலகத்தாரைவிட தேர்ந்தெடுத்தான். நபிமார்களையும் ரஸூல்மார்களையும் தவிர. எனது தோழர்களில் நான்கு பேர்களை எனக்காகத் தேர்ந்தெடுத்தான். அபூபக்கர் ؓ , உமர் ؓ , உதுமான் ؓ , அலி ؓ ஆகியோரை எனது தோழர்களாக ஆக்கினான். எனது தோழர்கள் அனைவரும் சிறந்தவர்கள். எனது உம்மத்தை ஏனைய உம்மத்துக்களை விட தேர்ந்தெடுத்தான். எனது உம்மத்தில் நான்கு நூற்றாண்டுகளைத் தேர்ந்தெடுத்தான். அவை முதலாவது நூற்றாண்டு, இரண்டாவது நூற்றாண்டு, மூன்றாவது நூற்றாண்டு, நான்காவது நூற்றாண்டு.** ( பஸ்ஸார் )

இந்த ஹதீஸிலும் ஸஹாபாக்களின், குலபாக்களின் சிறப்புக்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றதே தவிர அவர்களைப் பின்பற்றும்படிக் கூறப்படவில்லை. அவர்களின் சிறப்பு கூறப்பட்டிருப்பதானது அவர்களைப் பின்பற்றுவதைக் காட்டுகின்றது என்று முஹம்மது இஸ்தியாக் கூறுவாராயின், இதில் நான்கு நூற்றாண்டுகள் சிறந்ததாகக் கூறப்பட்டிருக்கின்றது. அப்படியாயின் இந்த நான்கு நூற்றாண்டில் உள்ளவர்களையும் பின்பற்ற வேண்டும். இதற்கு முஹம்மது இஸ்தியாக் உடன்படுவாரா?

முஹம்மது இஸ்தியாக் தனது தலைப்பிற்கு சம்பந்தமில்லாத ஹதீஸ்களைக் கொண்டு வந்து, தனது பலயீனத்தை வெளிப்படுத்தியுள்ளார். அடுத்ததாக இந்த ஹதீஸ் ஸஹீஹானதும் அல்ல; இது பலயீனமானதாகும். இது சம்பந்தமாக அல்பானி தனது "அல்அஹாதீது லயீபா வல் மவ்லூஆ" என்ற நூலில் 6123ம் இலக்கத்தில் பதிவு செய்துள்ளார். அதில் இது பலயீனமான ஹதீஸ் என்று கூறுகின்றார். காரணம் இதன் அறிவிப்பாளர் தொடரில் அபூஸாலிஹ் என்பவர் காணப்படுகின்றார். இவர் பலயீனமானவர் என்று கூறுகின்றார்.

அபூஸுர்ஆ "இது பாதிலான செய்தி" என்று கூறுகின்றார். இதை காலித் என்பவர் இட்டுக்கட்டியுள்ளார். இமாம் நஸாஈ "அபூஸாலிஹ் எனது தோழர்களைத் தேர்ந்தெடுத்துள்ளான் என்று அறிவிக்கும் ஹதீஸ் மல்லூஃ - இட்டுக்கட்டுப்பட்டது" என்று கூறுகின்றார்.

எனவே ஸஹீஹ் அல்லாத ஒரு செய்தியைக் கொண்டு வந்து மார்க்கத்தில் ஒன்றை நுழைப்பது ஷிர்க்கை ஏற்படுத்தும் என்பதனை விளங்கிக் கொள்ள வேண்டும்.

**08. முஹம்மது இஸ்தியாக் தனது வாதத்தை நிறுவுவதற்கு முன்வைக்கும் மற்றுமொரு ஆதாரம்** : (பக் : 11)

إِنَّ اللهَ قَدْ أَجَارَكُمْ عَلَى ضَلاَلَةٍ وَيَدُ اللهِ عَلَى الْجَمَاعَةِ

**அல்லாஹ் உங்களை வழிகேட்டிலிருந்து பாதுகாத்துள்ளான். அல்லாஹ்வின் கை ஜமாஅத்திலிருக்கிறது**.

இந்த ஹதீஸை வைத்துத்தான் எல்லா பிரிவுகளும் தாங்கள் நேர்வழியில் இருப்பதாகவும் வழிகேட்டில் ஒன்று சேரமாட்டோம் என்று கூறுகின்றார்கள். பெரேல்வி, தேவ்பந்தி, அஹ்லுல் ஹதீஸ், ஸலப் போன்ற அனைத்துப் பிரிவ்களின் வாதமும் இதுதான்.

இந்த ஹதீஸில் இஜ்மாஉஸ் ஸஹாபாவைப் பின்பற்றும்படி வரவுமில்லை; இஜ்மா என்ற சொல் இடம்பெறவுமில்லை. மாறாக இந்த ஹதீஸில் ''உம்மத்'' என்ற சொல்லே இடம்பெற்றுள்ளது. இதனை ஆதாரமாகக் கொண்டே நான்கு மத்ஹபுகளும் மத்ஹபைப் பின்பற்றுவது வாஜிப் என்று கூறி, நாங்கள் நபியின் உம்மத். இந்த உம்மத் வழிகேட்டில் போகாது'' என்று கூறுகின்றனர். இவைகள் அனைத்தையும் நன்கு தெரிந்து கொண்டே முஹம்மது இஸ்தியாக் மக்களை வழிகெடுக்கும் நோக்கில் இந்த ஹதீஸைக் கொண்டு வந்துள்ளார்.

ஸஹாபாக்கள் வழிகேட்டில் செல்லமாட்டார்கள் என்பதற்கு குர்ஆன் சான்றாகும். அவர்கள் வழிகேட்டில் செல்லமாட்டார்கள் என்பதற்காக வஹியில் இல்லாதவைகளை, அவர்கள் பெயரால் எழுதப்பட்டவைகளை பின்பற்றும்படி இஸ்லாம் எங்களுக்குக் கூறவில்லை. அவர்களின் பாதையாகிய குர்ஆன், ஸுன்னாவையே பின்பற்றும்படி கூறுகின்றது.

ஸஹாபாக்கள் நபி ﷺ அவர்களுடைய காலத்தில் சுயமாக ஒன்றைச் செய்து அல்லது சொன்னால், அது சரியா? அல்லது பிழையா என்பதை வஹி அறிவிக்கும். உதாரணமாக தொழுகையில் தும்மியதும் :

الحمد لله الذي حمدا كثيرا طيبا مباركا فيه ومباركا عليه كما يحب ربنا ويرضى என்று ஒரு நபித்தோழர் கூறினார். அதனை நபி ﷺ அவர்கள் அங்கீகரித்தார்கள். இது மார்க்கத்தில் அங்கீகாரம் என்று சொல்லப்படும்.

இதேபோன்று ஒரு நபித்தோழர் தனது மனைவியை மாதவிடாய் காலத்தில் தலாக் விட்டுவிட்டார். இதனை நபி ﷺ அவர்கள் கண்டித்தார்கள். இது மார்க்கமில்லாது போய் விட்டது.

இதேவேளை நபி ﷺ அவர்களுடைய வபாத்திற்குப் பிறகு ஸஹாபாக்களின் சொல், செயல் சரியா? அல்லது பிழையா என்று எவ்வாறு அறிந்து கொள்வது? நாம் அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் இவைகளை குர்ஆன், ஸுன்னாவுடன் உரசிப் பார்க்க வேண்டும்.

ஸஹாபாக்களின் மூலம் வந்துள்ள முத்தலாக் கூறுதல், வெள்ளிக்கிழமை இரண்டு அதான் கூறுதல், பெருநாள் தினத்தில் தகப்பலல்லாஹு மின்னா வமின்க கூறுதல், பெருநாள் தினத்தில் குளித்தல், பெண் ஸப்பின் நடுவில் நின்று இமாமத் செய்தல் போன்றவைகளை குர்ஆன் ஸுன்னாவுடன் உரசிப் பார்த்தால், இவைகள் குர்ஆன் ஸுன்னாவில் காணப்படவில்லை. எனவே இவைகள் மார்க்கத்தில் உள்ளவைகள் அல்ல என்று நாம் விட்டு விட வேண்டும்.

அனஸ் ؓ அவர்கள் சிறு பிள்ளைகளுக்குச் ஸலாம் சொல்வார்கள், அபூபக்கர் ؓ அவர்கள் பாதிமாவுக்கு ஸகாத்தை கொடுக்க மறுத்தார்கள்

போன்றவை இஜ்மாஉஸ் ஸஹாபாவாக இருக்கின்றது. இவைகளை குர்ஆன், ஸுன்னாவில் உரசிப்பார்த்தால், ஹதீஸில் ஆதாரம் காணப்படுகின்றது. எனவே இது பிழை இல்லை என்பதனை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

‘ ஆகவே நபி ﷺ அவர்களின் வபாத்திற்கு பிறகு யார் எதனைச் சொன்னாலும், செய்தாலும் அதனை வஹியுடன் உரசிப்பார்க்க வேண்டும். வஹியில் ஆதாரம் காணப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆதாரம் காணப்படா விட்டால், அது யாருடைய சொல், செயலாக இருந்தாலும் அதனைப் புறந்தள்ளி விட்டு வஹியை மட்டுமே பின்பற்ற வேண்டும்.

அடுத்ததாக முஹம்மது இஸ்தியாக் இந்த ஹதீஸை சரியாக கவனிக்காது, வெறுமனே ஜாமிஉஸ் ஸகீர், கிதாபுஸ் ஸுன்னா என்று மட்டுமே எழுதியுள்ளார். இந்தச் செய்தி ஸஹீஹானது அல்ல. கிதாபுஸ் ஸுன்னாவில் வந்துள்ள அறிவிப்பில் ஸயீத் என்ற அறிவிப்பாளர் காணப்படுகின்றார். இவர் முன்கருல் ஹதீஸ் என்று இப்னு ஹஜர் தக்ரீபில் கூறுகின்றார்.

இது மற்றுமொரு அறிவிப்பிலும் வந்துள்ளது. அதில் முஸ்அப் என்பவர் காணப்படுகின்றார். இவரும் முன்கருல் ஹதீஸ் என்று இப்னு அதீ கூறுகின்றார்.

இது மற்றுமொரு அறிவிப்பிலும் வந்துள்ளது. அந்த அறிவிப்பில் இஸ்மாயீல் என்பவர் காணப்படுகின்றார். இவரை அபூதாவுத் ‘‘சரியானவர் அல்ல என்றும், இவர் தன் தந்தையிடம் எதையும் கேட்கவில்லை’ என்று இப்னு ஹாதமும் கூறுகிறார்கள்.

இப்படிப்பட்ட அறிவிப்பாளர்களைக் கொண்ட இந்த ஹதீஸ் ‘‘ஹஸன்’’ என்ற தரத்திற்கு எவ்வாறு உயரும். இதனை அல்பானி ஹஸன் என்று கூறியது மிகப் பெரிய தவறாகும். எனவே இது ஸஹீஹான ஹதீஸ் அல்ல என்பதே முடிவாகும். இருந்தும் கூட இதில் இஜ்மாஉஸ் ஸஹாபாவைப் பின்பற்றுவதற்கு எவ்வித ஆதாரமுமில்லை.

**09. முஹம்மது இஸ்தியாக் தனது வாதத்தை நிறுவுவதற்கு முன்வைக்கும் மற்றுமொரு ஆதாரம் :**

**எனது தோழர்களை எனக்குப் பின் குறை கூறாதீர்கள். யார் அவர்கள்மீது அன்பு வைக்கிறார்களோ, அவர்கள் என்மீது அன்பு வைத்தவர்களாகவே அவர்களை விரும்புகிறார்கள். யார் அவர்கள் மீது கோபம் கொள்கிறார்களோ, அவர்கள் என்மீது கொண்ட கோபத்தினாலேயே அவர்களைப் பகைக்கின்றார்கள். யார் அவர்களை நோவினை செய்கின்றாரோ, அவர் என்னை நோவினை செய்தவராவார். யார் என்னை**

**நோவினை செய்கிறாரோ, அவர் அல்லாஹ்வை நோவினை செய்தவராவார். யார் அல்லாஹ்வை நோவினை செய்கிறாரோ, அவரை அல்லாஹ் பிடிப்பான்.** ( பக் : 12 )

இந்த செய்தியை இங்கு பதிந்து ஏதோ இலங்கை ஜமாஅதுல் முஸ்லிமீன் ஸஹாபாக்களைக் குறை கூறுவதாக சித்தரிக்கப் பார்க்கிறார் முஹம்மது இஸ்தியாக்.

‘‘ஸஹாபாக்களைப் பின்பற்ற வேண்டும். ஆனால் குர்ஆன், ஸுன்னாவுக்கு மாற்றமாக ஸஹாபாக்கள் செய்தவைகளைப் பின்பற்றக் கூடாது. ஏனெனில் அவை ஸஹாபாக்கள் செய்த தவறுகளாகும்’’ என்று முஹம்மது இஸ்தியாக் கூறுகின்றார். உதாரணமாக முத்தலாக்கைக் கூடுமாக்கியது, அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் ﵁ அவர்கள் பைஅத்தை முறித்தது, இரண்டு ஜமாஅத்தை உருவாக்கியது, உதுமான் ﵁ அவர்கள் இரண்டு அதானை உருவாக்கியது, உதுமான் ﵁ அவர்கள் பிரயாணத்தில் தொழுகையை நான்கு ரக்அத்துக்களாக்கியது போன்றவைகள் என்று ஸஹாபாக்களைக் குறை கூறுவது யார்? முஹம்மது இஸ்தியாக் அவர்களே! நாங்கள் அல்ல.

அவர் ஸஹாபாக்களைக் குறை கூறுவதில்லை எனின், மேலே உள்ள அனைத்து விடயங்களையும் ஏற்று அமல் செய்ய வேண்டும். அருமைத் தோழர்கள் இவ்வாறு குர்ஆன், ஸுன்னாவுக்கு மாற்றமாக நடக்கமாட்டார்கள். அவர்கள் குர்ஆன் ஸுன்னாவை மட்டுமே பின்பற்றுவார்கள் என்று நாங்கள் கூறுகின்றோம்.

அடுத்ததாக முஹம்மது இஸ்தியாக் ஹதீஸ் கலையில் மிகவும் பலயீனமானவராகக் காணப்படுகின்றார். வெறுமனே ஒரு இமாம் ஒரு ஹதீஸை சரி கண்டால், அதனை ஆய்வு செய்யாது அவரைத் தக்லீத் செய்து இவரும் சரி என்று கூறியுள்ளார். இதனால் மார்க்கத்தில் இல்லாத விடயங்கள் உள்ளே நுழைந்து விடுகின்றது.

உதாரணமாக நபி ﷺ அவர்கள் நீளத்திலும் அகலத்திலும் தாடியை கத்தரித்தார்கள் என்று இலங்கை வந்த நேரம் பகிரங்கமாகக் கூறியது; ஸப் சரி செய்யும்போது தடி எடுக்க வேண்டும் என்று கட்டளை இட்டது; நபியுடைய கப்றில் சென்று வஸீலா தேடுவது கூடும் என்று கூறியது மற்றும், துஆ புத்தகத்தில் எழுதியது.

இவ்வாறு பல பலயீனமான, மவ்கூபான விடயங்களைக் கொண்டு வந்து மார்க்கத்தில் புகுத்தியுள்ளார். இவர் கொண்டு வந்துள்ள ஹதீஸை சற்று கவனியுங்கள். இது திர்மிதியில் 3862ம் இலக்கத்திலும் முஸ்னத் அஹ்மதில் 16803ம் இலக்கத்திலும் பதிவாகியுள்ளது.

இமாம் திர்மிதி இதை ஹஸன் என்று தவறுதலாகக் கூறியதை அப்படியே தக்லீத் செய்து, இது ஹஸன் என்று கூறிவிட்டார். இந்த ஹதீஸின் தரத்தை சற்று கவனியுங்கள். அப்போதுதான் அவருடைய மோசடி வெளிச்சத்திற்கு வரும்.

திர்மிதியில் இடம்பெறக் கூடிய ஹதீஸை அல்பானி லயீப் என்று கூறுகின்றார். அர்னஊத் இந்த ஹதீஸைப் பற்றிக் கூறும்போது இதில் அப்துல்லாஹ் பின் அப்துர் ரஹ்மான் என்ற அறிவிப்பாளர் காணப்படுகின்றார். இவரை இப்னு ஹிப்பானைத் தவிர வேறு எவரும் உறுதிப்படுத்தவில்லை. ‘‘இவரை நான் யாரென்று அறியமாட்டேன்’’ என்று இப்னு மயீன் கூறுகின்றார். இமாம் தஹபியும் மீஸான் என்ற நூலில் ‘‘இவர் அறியப்படாதவர்’’ என்று கூறுகின்றார். இவரில் ஒரு பிரச்சினை இருப்பதாக இமாம் புகாரி குறிப்பிடுகிறார். அர்னஊத்தும் இதன் அறிவிப்பாளர் வரிசை பலயீனமானது என்று கூறுகின்றார். இந்த வகையில் இந்த ஹதீஸ் லயீப் என்பது தெளிவாகின்றது.

**10. முஹம்மது இஸ்தியாக் தனது வாதத்தை நிறுவுவதற்கு முன்வைக்கும் மற்றுமொரு ஆதாரம் :**

**சுவனம் செல்லும் கூட்டம் எதுவெனக் கேட்க, நானும் எனது தோழர்களும் இருந்த ஒன்று என்றும் எனது ஸுன்னாவையும் நேர்வழி நிற்கும் குலபாக்களின் ஸுன்னாவையும் பிடித்துக் கொள்ளுங்கள் என்ற இரு ஹதீஸையும் ஆதாரமாகக் கொண்டு வந்து ஸஹாபாக்களின் சொல், செயல், அங்கீகாரம் அனைத்தும் நபி ﷺ அவர்களின் சொல் , செயல், அங்கீகாரம் போன்றே இவைகளும் மார்க்கமாகும் என்று கூறுகின்றார்.** பக்கம் : 13

முதலாவதாக இந்த இரண்டு ஹதீஸிலும் இஜ்மாஉஸ் ஸஹாபா என்ற சொல்லே இல்லை. முதலாவது ஹதீஸில் நானும் எனது தோழர்களும் எந்த ஒன்றில் இருக்கின்றோமோ, அந்த ஒன்றில் இருப்பவர்கள் சுவனம் என்று வந்துள்ளதே தவிர, அவர்களைப் பின்பற்றும்படி வரவில்லை. நானும் எனது தோழர்களும் இருந்த ஒன்று அல்லாஹ்வின் வஹி என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. நபி ﷺ அவர்களும் தோழர்களும் இருந்த வழியாகிய வஹியை மட்டுமே பின்பற்ற வேண்டும் என்று நாம் கூறுகின்றோம். ஆனால் முஹம்மது இஸ்தியாக் வஹியில் இல்லாத விடயங்களை மார்க்கத்தில் இணைத்துள்ளார். எனவே முஹம்மது இஸ்தியாக்கினுடைய அமைப்பு நபி ﷺ அவர்களுடைய அமைப்பு அல்ல என்று கூறுகின்றோம்.

குலபாக்களின் ஸுன்னத்தையும் பிடித்துக் கொள்ளுங்கள் என்ற ஹதீஸில் இஜ்மாஉஸ் ஸஹாபாவைப் பின்பற்ற ஆதாரமிருப்பதாக முஹம்மது இஸ்தியாக் கூறுகின்றார். இந்த ஹதீஸை வாசகர்கள் சற்று கவனிக்கவும்.

உலகத்தில் இருக்கும் அனைத்துப் பிரிவுகளும், வழிகெட்டவர்களும் மத்ஹபுகளும் தாங்கள் செய்யக் கூடிய அனைத்துப் பித்அத்துக்களுக்கும் ஷிர்க்குகளுக்கும் மேலேயுள்ள இரண்டு ஆதாரங்களைத்தான் முன்வைக்கிறார்கள். உதாரணமாக ஸுபஹுத் தொழுகையில் குனூத் ஓதுதல், மையித்திற்கு யாஸீன் ஓதுவது, முத்தலாக் கூறுதல், பிரயாணத்தில் நான்கு ரக்அத்துக்கள் தொழுதல், வெள்ளிக்கிழமைகளில் இரண்டு அதான் கூறுதல் போன்று இன்னும் எத்தனையோ விடயங்களுக்கு இந்த இரண்டு ஹதீஸ்களையும்தான் ஆதாரமாகக் காட்டுகின்றனர். இதனைத்தான் மஸ்ஊத் அஹ்மதும் முஹம்மது இஸ்தியாக்கும் விளங்கி பல பித்அத்துக்களையும் ஷிர்க்குகளையும் புகுத்தியுள்ளனர். அதே நேரத்தில் ஸஹாபாக்களின் சொல், செயல் குர்ஆன், ஸுன்னாவிற்கு மாற்றமில்லாமல் இருக்க வேண்டும் என்ற ஒரு நிபந்தனையையும் இடுகின்றனர்.

''குலபாக்களின் செயல் குர்ஆன், ஸுன்னாவிற்கு மாற்றமாக இருந்தால் அதனை எடுக்காதீர்கள்; மாற்றமில்லாமல் இருந்தால் அதனை மார்க்கமாக்கிக் கொள்ளுங்கள்'' என்ற நிபந்தனை குர்ஆனிலோ அல்லது ஹதீஸ்களிலோ எங்குமே காணப்படவில்லை. இவைகள் இவர்களது மனோ இச்சை விரும்புவதை எடுக்கவும், விரும்பாததை தள்ளவும் இவர்களாக இட்டுக் கொண்ட சட்டங்களாகும். அல்லாஹ்வின் வேதத்தில் இல்லாத எந்தவொரு நிபந்தனையையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பது நபிமொழியாகும்.

இவர்களது தெளிவான முரண்பாட்டையும், அறியாமையையும் சற்று கவனியுங்கள். ஸஹீஹான ஹதீஸ்கள் இரண்டு ஒன்றுக்கொன்று முரண்படுவது போன்று தோன்றினால், இரண்டையும் சேர்த்து அமல் செய்ய முடியுமா? என்று பார்க்க வேண்டும். முடியாவிட்டால், இந்த இரண்டில் எது பிந்திய செய்தி என்று பார்த்து அதனை அமல் செய்ய வேண்டும். இந்த அடிப்படையை அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். முஹம்மது இஸ்தியாக்கும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இதற்கு உதாரணமாக ஒன்றைக் கூறுவதெனில், ஸஹாபியப் பெண்மணிகள் முகம் திறந்திருந்ததாக சில ஹதீஸ்கள் காணப்படுகின்றன. அதேபோன்று பெண்கள் முழுமையாக மறைக்கப்பட வேண்டும் என்பது சம்பந்தமாக ஹதீஸ்களும் குர்ஆன் வசனங்களும் காணப்படுகின்றன. இப்படி முரண்பாடு போன்று தோன்றும்போது, ஆய்வு செய்து பார்த்ததில் ''பெண்கள் முகத்தை மூட வேண்டும் என்பது பிந்திய செய்தியாகும். இதனையே நாங்கள் பின்பற்றுகின்றோம். முஹம்மது இஸ்தியாக்கும் இதனை ஏற்றுக் கொள்கிறார். இதில் அவர் முந்திய செய்தியை எடுப்பதில்லை.

இப்பொழுது விடயத்திற்கு வாருங்கள். இஜ்மாஉஸ் ஸஹாபா ஹதீஸின் ஒரு பகுதி என்பது முஹம்மது இஸ்தியாக்கின் அகீதா. அதாவது அதுவும் வஹியேயாகும் என்பதாகும். ஹதீஸும் இஜ்மாஉஸ் ஸஹாபாவும் வஹி என்றால், இரண்டும் முரண்படும் சந்தர்ப்பங்களில் பிந்திய செய்தியையல்லவா எடுக்க

வேண்டும். உதாரணமாகக் கூறுவதாயின், ஒரு முஸ்லிமுடன் 3 நாட்களுக்கு மேல் வெறுத்திருக்கக் கூடாது என்று ஹதீஸில் காணப்படுகின்றது. ஆனால் இஜ்மாஉஸ் ஸஹாபாவில் பாதிமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அபூபக்கர் ﷺ அவர்களுடன் மரணிக்கும் வரை கதைக்கவில்லை என்று காணப்படுகின்றது. உங்களது பார்வையில் இரண்டும் வஹி என்றால், பிந்திய செய்தியை ஏற்று, ''ஒரு முஸ்லிம் மற்றைய முஸ்லிமுடன் 3 நாள் என்ன மரணிக்கும் வரை கூட கதைக்காமல் இருக்கலாம் என்று தீர்ப்பு வழங்குவீர்களா? இதேபோன்று இப்னு உமர் ﷺ அவர்கள் தாடி வெட்டியதாக வரும் வரலாற்றையும் நீங்கள் பின்பற்ற வேண்டும். ஏன் இவைகளை புறந்தள்ளுகிறீர்கள்? உங்களது ஆழ்மனது ''இஜ்மாஉஸ் ஸஹாபா வஹியல்ல'' என்று கூறுகின்றது.

இதேபோன்று ஒரு ஸஹாபியின் செயலை மற்றைய ஸஹாபாக்களில் எவருமே எதிர்க்கவில்லை என்றால், அது வஹியாகும் என்ற புதிய வாதத்தையும் முன்வைக்கின்றனர். ஏனெனில் அது நபி ﷺ அவர்களுடைய ஸுன்னாவாக இருப்பதனால்தான் மற்றைய ஸஹாபாக்கள் யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்கின்றனர். அப்படியானால் முத்தலாக் கூறியது, 6 மாதங்கள் கதைக்காமல் இருந்தது, தாடி வெட்டியது போன்ற எத்தனையோ விடயங்களுக்கு ஸஹாபாக்களில் யாருமே எதிர்ப்புத் தெரிவித்ததாக இல்லையே! அப்படியானால் ஏன் அவற்றைப் புறந்தள்ளுகிறீர்கள்?

இரண்டாவது ஹதீஸில் ''எனது ஸுன்னாவையும் குலபாக்களின் ஸுன்னாவையும்'' என்று வந்துள்ளது. இந்த இரண்டு ஸுன்னாக்களும் ஒரே ஸுன்னாவத்தான் குறிக்கின்றதா? அல்லது இரண்டும் வேறு வேறு ஸுன்னாக்களா என்ற சந்தேகம் வரலாம். உதாரணமாக : நபி ﷺ அவர்களுடைய ஸுன்னா தாடி வைப்பதாகும். குலபாக்கள், ஸஹாபாக்களின் ஸுன்னாவும் தாடி வைப்பதேயாகும். இந்த இரண்டும் ஒன்றே. நபி ﷺ அவர்களுடைய ஸுன்னா என்று நாம் ஹதீஸ்களிலே எதனைக் காண்கின்றோமோ, அதனைத்தான் அவர்கள் பின்பற்றியுள்ளார்கள்.

அப்படியானால் ஏன் எனது ஸுன்னா என்றும் குலபாக்களின் ஸுன்னா என்றும் பிரித்துக் காட்ட வேண்டும் என்ற சந்தேகமும் எழலாம்? ஒரு சிறப்பைக் காட்டுவதற்கு அல்குர்ஆனில் இவ்வாறு கூறப்பட்டிருக்கின்றது.

مَنْ كَانَ عَدُوًّا لِلَّهِ وَمَلَائِكَتِهِ وَرُسُلِهِ وَجِبْرِيلَ وَمِيكَالَ فَإِنَّ اللَّهَ عَدُوٌّ لِلْكَافِرِينَ [البقرة: 98

**யார் அல்லாஹ்வுக்கும் அவனுடைய மலக்குகளுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் ஜிப்ரயீல், மீக்காயீலுக்கும் விரோதிகளாக இருக்கின்றார்களோ ........**

( 02. 98 )

மேற்படி குர்ஆன் வசனத்தில் மலக்குமார்கள் என்ற வாசகத்திற்குள் ஜிப்ரயீல், மீக்காயீல் என்பவர்கள் உள்வாங்கப்பட்டு விட்டார்கள். எனினும் அவர்களின் சிறப்பை எடுத்துக் காட்ட அவர்களின் பெயர்களை தனித்தனியாகப் பிரித்தும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறே "எனது ஸுன்னா" என்பதற்குள் குலபாக்கள் அடங்கிவிட்டார்கள். இருந்தாலும் அவர்களின் சிறப்பை எடுத்துக் காட்டவே அவர்களைப் பிரித்துக் கூறப்பட்டுள்ளது. ஆகவே நபி ﷺ அவர்களுடைய ஸுன்னாவையே அவர்களும் பின்பற்றுவார்கள். "இதை நீங்களும் பிடித்துக் கொள்ளுங்கள்" என்று மறுமைநாள் வரும் வரை உள்ள உம்மத்திற்குரிய கட்டளையாகும். அதாவது நபி ﷺ அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் மர்பூவாக பதிவு செய்யப்பட்டுள்ளதோ, அதுதான் ஸஹாபாக்களின், குலபாக்களின் வழிமுறையுமாகும். மர்பூஃ அல்லாதவைகள் ஒன்றும் அவர்களின் வழிமுறையல்ல என்பது உறுதியான விடயமாகும். எனவே இஜ்மாஉ மார்க்கமல்ல என்பது தெளிவாகின்றது. அப்படியில்லாவிட்டால் இரண்டு ஹதீஸ்களிலும் உள்ள ஸுன்னாக்கள் வேறு வேறு ஸுன்னாக்களைக் குறிக்கின்றதா?

ஆம், வேறு வேறு ஸுன்னாக்களைத்தான் குறிக்கின்றது என்று முஹம்மது இஸ்தியாக் வாதிட்டால், உதாரணமாக நபியின் ஸுன்னத் தாடியை வளரவிடுதல், இப்னு உமர் ؓ அவர்களின் ஸுன்னத் தாடியைக் கத்தரித்தல் என்று எடுத்துக் கொண்டால், குலபாக்கள், ஸஹாபாக்கள் செய்த அனைத்தும் ஸுன்னாவாகிவிடும். இந்தவகையில், முத்தலாக் கூறுதல், இரண்டு அதான் கூறுதல் போன்றவைகளைப் புறக்கணிக்க முடியாது. இது குர்ஆன், ஸுன்னாவுக்கு முரணானது என்று கூறவும் முடியாது, ஏனெனில், நபி ﷺ அவர்கள் எந்த நிபந்தனையுமின்றி "எனது ஸுன்னாவையும் குலபாக்களின் ஸுன்னாவையும் பின்பற்றுங்கள்" என்றே கூறியுள்ளார்கள். நிபந்தனை இவர்கள் இட்டுக் கொண்டதே!

அப்படியானால் இந்த ஹதீஸின் உண்மை நிலை என்ன? என்ற ஒரு கேள்வி எழுகின்றது. அதற்கான பதில் :

01. இரண்டு ஸுன்னத்தையும் ஒரு ஸுன்னத்தாகக் கருத வேண்டும். அதாவது நபி ﷺ அவர்கள் செய்ததைத்தான் குலபாக்களும் செய்வார்கள். அதற்கு மர்பூஃவான ஆதாரம் தேவை. இந்த வகையில் சிந்திக்கும்போது எந்த சிக்கலும் ஏற்படாது. அதேபோன்று மர்பூஃ அல்லாதவைகளை குலபாக்கள் செய்யவில்லை என்று நாம் நம்ப வேண்டும்.

இந்த வகையில் பெருநாள் தினத்தில் தகப்பலல்லாஹு மின்னா வமின்கும் ஓதுதல், பெருநாள் தினத்தில் குளித்தல், ஸப் சரி செய்யும் போது தடி எடுத்தல், ஜும்ஆ தினத்தில் இரண்டு அதான் கூறுதல், பிரயாணத்தில் கஸ்ர் செய்யாமல் தொழுதல், அத்தஹிய்யாத்தில் 'அஸ்ஸலாமு அலைஹி' என்று ஓதுதல் போன்ற விடயங்கள் அனைத்தும் மர்பூஃ அல்ல. இவைகளை ஸஹாபாக்களோ

குலபாக்களோ செய்யவும் இல்லை என்று நம்புதல் வேண்டும். ஒருவர் இவைகளைச் செய்தால், அது பித்அத்தாகும். பித்அத் ஷிர்க் ஆகும்.

எனவேதான் மத்ஹபுகள், பிரிவுகள் பித்அத் செய்கிறார்கள் என்று கூறுகின்றோம். இதேபோன்றுதான் முஹம்மது இஸ்தியாக்கின் பிரிவும் பித்அத் செய்கிறார்கள் என்று கூறுகின்றோம்.

02. அல்லது இவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, எனது ஸுன்னத் என்பது மர்பூ.்.வான ஹதீஸில் வந்துள்ளவைகளே என்பது யாவரும் அறிந்த விடயம். குலபாக்களின் ஸுன்னத் என்பது அவர்களின் ஆட்சி காலத்தில் வழி நடாத்துதலைக் குறிக்கும். அதாவது நிர்வாக விடயத்தில் குலபாக்களின் வழிகாட்டல் (ஸுன்னத்)களை எடுத்து நடக்க வேண்டும் என்பது பொருளாகும். காரணம் என்னவெனில் மொழி ரீதியாக நிர்வாகம் நடாத்துவதற்கும் ஸுன்னத் என்று கூறப்படும்.

ஸஹீஹான ஹதீஸில் ''சில தலைவர்கள் வந்து எனது வழியல்லாத (எனது ஸுன்னத் அல்லாத)வைகளைக் கொண்டு வழி நடாத்துவார்கள். அதுவும் நல்ல காலமே என்று நபி ﷺ அவர்கள் கூறிய ஹுதைபதுப்னுல் யமான் ؓ அவர்கள் அறிவிக்கக் கூடிய ஸஹீஹான ஹதீஸ் ஸஹீஹுல் புகாரி : 3606, 7084 மற்றும் ஸஹீஹ் முஸ்லிம் : 1847 போன்ற கிரந்தங்களில் இடம் பெற்றுள்ளன.

நபி ﷺ அவர்களின் ஸுன்னத்தை விடுவது பாவமாகும். பாவம் செய்யும் தலைவரின் ஆட்சி காலம் நல்லதாக இருக்க முடியாது. அப்படியானால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஹதீஸில் நபி ﷺ அவர்களின் வழிமுறையை விட்டு விட்டு வழிநடாத்தும் தலைவர்களின் காலத்தை நல்ல காலம் என ஏன் நபி ﷺ அவர்கள் குறிப்பிட்டார்கள்? நபி ﷺ அவர்களின் ஸுன்னத் அல்லாததைக் கொண்டு வழி நடாத்துவது என்பது நிர்வாக விடயத்திலாகும். நிர்வாக விடயத்தில் தலைவரின் வழி நபி ﷺ அவர்களின் நிர்வாக விடயத்திற்கு மாற்றமானதாக இருக்கலாம். அப்படி இருந்தாலும் குலபாக்களுக்குக் கட்டுப்பட வேண்டும் என்பதையே ஹதீஸ் காட்டுகிறது. (சுருக்கம்)

குலபாக்கள், ஸஹாபாக்கள், அதற்குப் பின் தோன்றிய விசுவாசிகளின் பாதையை நாம் பின்பற்ற வேண்டும் என்றுதான் அல்லாஹ் வலியுறுத்தியுள்ளானே தவிர, அவர்களைப் பின்பற்றும்படி கூறவில்லை என்பதை வாசகர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். எனவேதான் அல்லாஹ் ஸுரத்துந் நிஸாவில் ''ஸபீலுல் மு.்.மினீன்'' - விசுவாசிகளின் பாதையைப் பின்பற்ற வேண்டும் என்று கூறியுள்ளான். விசுவாசிகளைப் பின்பற்றுங்கள் என்று கூறவில்லை. முஹம்மது இஸ்தியாக் குர்ஆன் ஸுன்னாவைத் தவிர, வேறு எதுவும் எங்களிடம் இல்லை என்று கூறும் வாதம் ஒரு பொய்யான வாதமாகும். குர்ஆன், ஸுன்னாவில் இல்லாதவைகளை இவர் பின்பற்றுகின்றார் என்பதை நாம் மேலே பல இடங்களில் நிரூபித்துள்ளோம்.

மத்ஹபு வாதிகளினதும் ஏனைய பிரிவுகளின் வாதமும் இவரின் வாதத்தையே ஒத்திருக்கின்றது. அவர்களும் இமாம்களின் இஜ்மாவிற்கு 4 : 115 வசனத்தைக் கொண்டு வந்து "அந்த வசனத்தில் மு.ஃ.மின்களின் பாதை" என வந்துள்ளது. இது ஸஹாபாக்களையும் குறிக்கும்; இமாம்களையும் குறிக்கும். காரணம் நான்கு இமாம்களும் மு.ஃ.மின்களே என்று வைக்கும் வாதத்தை, பிழை என்று எப்படி முஹம்மது இஸ்தியாக் கூறுவார்?

இதேபோன்று அனைத்து பித்அத்துக்களுக்கும் உமர் கத்தாப் ﷺ அவர்களின் இஜ்மாவான نعمة البدعة هذه "இது நல்ல பித்அத்" என்ற இஜ்மாவை ஆதாரமாகக் காட்டுகிறார்கள். இதை பிழை என்று முஹம்மது இஸ்தியாக் எப்படி கூறுவார்? இதேபோன்று பல பிரிவுகளாக முஸ்லிம்கள் இருக்கலாம் என்பதற்கு ஸஹாபாக்களின் காலத்தில் இரண்டு இமாம்கள் இருந்தார்கள். சிரியாவில் ஒரு கிலாபத்தும், மக்காவில் ஒரு கிலாபத்தும் இருந்தது என்ற இஜ்மாவைக் கொண்டு வந்து, மஸ்ஊத் அஹ்மத் அங்கீகரித்துள்ளார். இதனை இவர் தனது "தாரீஹுல் இஸ்லாம்" என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். எனவே பிரிவு கூடும் என்று கூறுவதை முஹம்மது இஸ்தியாக் எப்படி பிழை என்று கூறுவார்?

ஆகவே அல்குர்ஆனில் அல்லாஹ் :

**உங்கள் ரப்பிடமிருந்து உங்களின்பால் இறக்கப்பட்டதைப் பின்பற்றுங்கள். இதனை விடுத்து உங்களுடைய நேசர்களைப் பின்பற்றாதீர்கள்.** ( அல்குர்ஆன் - 07 : 03 )

இதேபோன்று ஹஜ்ஜதுல் விதாவில் நபி ﷺ அவர்கள் :

**நான் உங்களுக்கு மத்தியில் இரண்டை விட்டுச் செல்கின்றேன்; அவற்றைப் பற்றிப் பிடிக்கும் காலமெல்லாம் நீங்கள் வழிகெடமாட்டீர்கள். (அவை) அல்லாஹ்வின் வேதமும் அவனுடைய நபியின் வழிமுறையுமாகும்.** (முஅத்தா)

மேலேயுள்ள அல்குர்ஆனிய வசனமும், ஹதீஸும் வானத்திலிருந்து எமது ரப்பிடமிருந்து இறக்கப்பட்டவைகளான அல்குர்ஆன், ஹதீஸ் ஆகிய இரண்டை மட்டுமே பின்பற்ற வேண்டும் என்பதை தெளிவுபடுத்துகின்றன. இதுவே ஒரு முஸ்லிமின் கொள்கையுமாகும்.

இலங்கையில் ஜமாஅதுல் முஸ்லிமீனாகிய நாங்கள் இவ்விரண்டையுமே பின்பற்றிக் கொண்டு இதன்பால் மக்களையும் அழைக்கின்றோம். இதில் ஷஹாதத் கலிமாவை மொழிந்து அமீரிடம் பைஅத் செய்யாது, வேறு எந்தப்பிரிவில் இருந்து மரணித்தாலும் அவர் ஜாஹிலிய்யத்தில் மரணித்து, நரகம் நுழைவார் என்பது குர்ஆன், ஸுன்னாவின் முடிவாகும். ஹக்கை எத்தி வைத்துவிட்டோம். அல்ஹம்து லில்லாஹ்!

குறிப்பு : முதலாவது ஹதீஸில் اليوم - ''நானும் எனது தோழர்களும் இன்று இருக்கும் வழி'' என்ற வாசகம் இருக்கின்றது. '' اليوم - இன்று'' என்ற வாசகம் பலயீனமானது; இதனை இலங்கையைச் சேர்ந்த உமர் அலி மறைத்து விட்டார்'' என்று ஒரு அவதூறை முஹம்மது இஸ்தியாக் குறிப்பிடுகின்றார். நஊது பில்லாஹ். நாங்கள் எங்கே மறைத்தோம் என்று நிரூபிக்க முடியுமா? பலயீனமாக இருந்தால் நாங்கள் அச்சொல்லை பாவிக்கமாட்டோமே. இதன் பொருள் மறைத்தோம் என்பதா?

இந்த வாசகம் ஸஹீஹாக இருந்தால் நபித்தோழர்கள் நபி ﷺ அவர்களின் காலத்தில் மட்டுமே நேர்வழியில் இருந்தார்கள். நபி ﷺ அவர்களின் மரணத்திற்குப் பின் நபித்தோழர்கள் வழி கேட்டில் போய் விட்டார்கள் என்று நாம் விளங்க வேண்டி வரும் என்று அவராகவே கற்பனை செய்து இஸ்லாத்தில் مفهوم مخالفة ''மப்ஹூம் முஹாலபா'' என்ற மற்றுமொரு மூலாதாரத்தைக் கொண்டு வர முயல்கின்றார்.

ஒரு வாதத்தை ஆதாரங்களைக் கொண்டு நிறுவ வேண்டும். கேட்டவைகளைக் கொண்டு மற்றவர்மீது படுதூறு கூறக் கூடாது. ஹதீஸ் ஸஹீஹானதாயினும் அல்லது பலயீனமானதாயினும் சரியே. வேறு ஆதாரங்களைக் கொண்டு அருமை நபித்தோழர்கள் நபி ﷺ அவர்களின் காலத்திலும் அவர்களது வபாத்திற்கு பின்னரும் வழிகேட்டில் செல்லவும் இல்லை; பித்அத்துக்களைச் செய்யவும் இல்லை. அவர்கள் வஹியை மட்டுமே பின்பற்றியுள்ளார்கள் என்று குர்ஆன், ஹதீஸ் கூறுகின்றது.

''இன்று'' என்ற வாசகத்தை நாங்கள் மறைத்து மக்களை ஏமாற்றுபவர்களாக இருந்தால், மஸ்ஊத் அஹ்மத், முஹம்மது இஸ்தியாக் ஆகியோரின் பிழையான கருத்துக்களையும் மறைத்து மக்களை வழிகேட்டில் விட்டிருப்போமே! அப்படியல்ல. சத்தியம் மக்களுக்கு எட்ட வேண்டும். அசத்தியத்தை மக்களுக்கு தோலுரித்துக் காட்ட வேண்டும் என்ற பணி முக்கியம் என்பதை நாங்கள் விளங்கியே முஹம்மது இஸ்தியாக்கின் பிழையான கூற்றுக்களை திருத்த முயல்கின்றோம்.

மற்றுமொரு குறிப்பு : ஸஹாபாக்கள் எப்போதுமே நேர்வழியில்தான் இருந்தார்கள். சற்றும் பிசகவில்லை என்று கூறுகின்றோம். ஆனால், முஹம்மது

இஸ்தியாக் ஸஹாபாக்கள் குர்ஆன், ஸுன்னாவுக்கு மாற்றமாக நடந்த சம்பவங்கள் இருக்கின்றன என்று கூறுகின்றார். உதாரணமாக : முத்தலாக், இரண்டு அதான் போன்றவைகளைக் குறிப்பிடலாம். அவைகளை நாங்கள் எடுக்க மாட்டோம் என்று மறைமுகமாக ஸஹாபாக்களின் மீது அபாண்டத்தைச் சுமத்துகின்றார். ஸஹாபாக்கள் இவரின் கூற்றிலிருந்து நிரபராதிகள் என்பது எங்கள் அகீதாவாகும்.

இலங்கையில் உள்ள ஜமாஅதுல் முஸ்லிமீனைச் சேர்ந்தவர்கள் வழிகேட்டில் சென்றுவிட்டதாக 17ம் பக்கத்தில் கூறுகிறார்.

யார் குர்ஆன், ஸுன்னாவை மட்டும் பின்பற்றி நேர்வழியில் இருப்பவர்கள்? யார் குர்ஆன், ஸுன்னாவுடன் பல விடயங்களை இணைத்து வழிகேட்டில் இருப்பவர்கள் என்பதை இருவரது கொள்கையையும் குர்ஆன், ஸுன்னாவுடன் உரசிப் பார்த்து வாசகர்கள் விளங்கிக் கொள்ளவும்.

**11. முஹம்மது இஸ்தியாக் தனது வாதத்தை நிறுவுவதற்கு முன்வைக்கும் மற்றுமொரு ஆதாரம் :** ( பக் : 18 )

நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள் : **என்னைக் கண்டவர்களும் என்னோடு இருந்தவர்களும் உங்களில் இருக்கும் வரை நீங்கள் நலவில் இருப்பீர்கள்.**

இந்த ஹதீஸில் இஜ்மாஉஸ் ஸஹாபா பற்றி எதுவும் கூறப்படவுமில்லை. அவர்கள் பரகத் பொருந்தியவர்கள் என்பது விளங்குகிறது. இதில் யாரும் மாற்றுக் கருத்து கொள்ள மாட்டார்கள். ஸஹாபாக்கள் நலவில் இருப்பார்கள் என்று நபி ﷺ அவர்கள் கூறக் காரணம், அவர்கள் வஹியை மட்டும் பின்பற்றினார்கள் என்பதற்காகவே. நாங்களும் வஹியை மட்டும் பின்பற்றுங்கள் என்றே கூறுகிறோம்.

முஹம்மது இஸ்தியாக் 17ம் பக்கத்தில் எங்களைப் பற்றி முன்வைக்கும் சில விமர்சனங்கள்.

01. இஜ்மாஉஸ் ஸஹாபா, மவ்கூப், ஹுக்மன் மர்பூ. இவைகளை இலங்கை ஜமாஅதுல் முஸ்லிமீன் பின்பற்றுவதில்லை.

பதில் : ஆம். நாங்கள் இவைகளைப் பின்பற்றுவதில்லை. காரணம் நாங்கள் வானத்திலிருந்து இறக்கப்பட்டவைகளையே பின்பற்றுகிறோம். அவை குர்ஆன்,

ஸுன்னா மட்டுமே. மேற்கூறப்பட்டவைகள் பூமியிலிருந்து தோன்றியவைகளாகும். அவைகளைப் பின்பற்றுபவர் ஷிர்க், பித்அத் செய்பவராவார். வானத்திலிருந்து இறக்கப்பட்டவைகள் ஹக் - சத்தியமாகும். இதனை விசுவாசிகள் பின்பற்றுவார்கள்; என்றும் பாதில் - அசத்தியம் பூமியிலிருந்து தோன்றியது. இதனை நிராகரிப்பவர்கள் பின்பற்றுவார்கள் என்றும் அல்குர்ஆன் கூறுகின்றது.

இதனால் நாங்கள் ஹக்கைப் பின்பற்றுகின்றோம். முஹம்மது இஸ்தியாக் பாதிலைப் பின்பற்றுகின்றார்.

02. இலங்கை ஜமாஅத் தவாதுருல் அமல், முறாஹதாவைப் பின்பற்றுவதில்லை.

பதில் : ஆம். இது வஹியல்ல; இதனால் நாம் இதனைப் பின்பற்றுவதில்லை.

03. ஜமாஅதுல் முஸ்லிமீனின் அஸ்திவாரம் மதீனாவில்தான் வைக்கப்பட்டது என்று இலங்கை ஜமாஅத் கூறுகிறது.

பதில் : இது எங்கள்மீது கூறும் படுதூறாகும். நபி ﷺ அவர்களின் ஜமாஅதுல் முஸ்லிமீனின் அஸ்திவாரம் மக்காவில் வைக்கப்பட்டது என்று நாங்கள் கூறி வருகின்றோம். சில வருடங்களுக்கு முன்னர் முஹம்மது இஸ்தியாக் ''முஹ்தலிப் அத்வார் ஓர் ஜமாஅதுல் முஸ்லிமீன்'' என்ற ஒரு நூல் எழுதி, அதில் ஜமாஅதுல் முஸ்லிமீனின் அஸ்திவாரம் மதீனாவில் வைக்கப்பட்டிருந்ததாக எழுதியிருந்தார். இதைக் கண்ட நாங்கள் அதிர்ச்சியடைந்து இது பிரிவுகளுக்கு பலத்த ஆதாரமாயிற்றே! இதை அவர்கள் படித்தால் நபியவர்கள் மக்காவில் சுமார் 10 வருடங்கள் ஜமாஅத் இன்றி, அமீர் இன்றி இருந்திருக்கின்றார்களே! எனவே நாங்கள் ஜமாஅத் இல்லாது, அமீர் இல்லாது இருப்பதும் சரியே என்று வாதிப்பார்களே! இது இஸ்லாத்தின் அத்திவாரத்தை தகர்க்கும் கருத்தாயிற்றே! என்று நாங்கள் கவலைப்பட்டு முஹம்மது இஸ்தியாக் இலங்கை வந்த நேரம் இதனை எடுத்துக் கூறினோம். உடனே இதை அடுத்தப் பதிப்பில் மாற்றுவோம் என்று கூறி, சுமார் 10 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இன்னும் திருத்தவில்லை. விடயம் இவ்வாறிருக்க நாங்கள்தான் இவ்வாறு கூறியதாக ஒரு படுதூறைக் கூறிவிட்டார். இது எதனைக் காட்டுகிறது என்றால், அவர் ஒரு பிழையைச் செய்து விட்டால், அதை ஒரு காலமும் திருத்தமாட்டார். இவ்வாறு பல சம்பவங்கள் உள்ளன :

I. மேலே சுட்டிக்காட்டியுள்ள சம்பவம் இதுவரை மாற்றப்படவில்லை.

ii. இஜ்மாஉஸ் ஸஹாபா, மவ்கூப், ஹுக்மன் மர்பூ.ஃ. இவைகளை நூலிலிருந்து அகற்றி விடுவோம் என்று 8 வருடங்களுக்கு முன் கூறினார். இப்போது மாறிவிட்டார்.

iii. பஸ்ஹ் நிகாஹ் விடயத்தில் தான் செய்த தவறை இன்னும் திருத்தவில்லை.

iv. நபி ﷺ அவர்களின் கப்றில் வஸீலா தேடலாம் என்று எழுதிய விடயம் பிழை என்று சுட்டிக் காட்டியும் இன்னும் திருத்தவில்லை.

v. பாவமான காரியத்திலும் அமீருக்குக் கட்டுப்பட வேண்டும் என்று எழுதிய விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டும் இன்னும் திருத்தவில்லை.

vi. இப்னு உமர் ؓ அவர்கள் தாடியைக் கத்தரித்தார்கள். எனவே நாங்களும் கத்தரிக்கலாம் எனக் கூற, இது மர்பூ.்.வான ஹதீஸிற்கு மாற்றமில்லையா? எனக் கேட்கப்பட்டபோது, இதனை மாற்றிவிடுவோம் எனக் கூறி, இதுவரை மாற்றவில்லை. பிழை என்று கூறிய பின்னரும் முஹம்மது இஸ்தியாக் இலங்கை வந்த நேரம் ஒருவர் தாடி கத்தரிக்கலாமா எனக் கேட்க, கூடும் என்று இப்னு உமர் ؓ அவர்களின் ஆதாரத்தைக் காட்டினார்.

vii. பள்ளிக்குள் ஸுத்ரா தேவை இல்லை என்று கூறியபோது, ஷைத்தானுக்கும் ஸுத்ரா வைக்க வேண்டும்'' என்று ஹதீஸ் வந்துள்ளது என நாங்கள் கூறியும் இன்னும் இந்தப் பிழையான கொள்கையை மாற்றவில்லை.

viii. இணைவைப்பவர்களை மக்கா, மதீனாவுக்கு முகவர்களாக தொழிற்பட்டு அழைத்துச் செல்லக் கூடாது. பாகிஸ்தானில் இவ்வாறு செய்கிறார்கள் என்று கூற, அந்த முகவர் நிலையத்தை மூடிவிடுவோம் என்று சுமார் 10 வருடங்களுக்கும் முன் கூறியும் இன்னும் மூடப்படவில்லை. இப்படிப் பல விடயங்களைக் கூறலாம்.

04. ‘‘மவ்கூப் மார்க்கத்தில் உள்ளது அல்ல'' என்று இலங்கை ஜமாஅத் கூறுகின்றது.

பதில் : ஆம். ‘‘மவ்கூப் மார்க்கத்தில் உள்ளது அல்ல'' என்று கூறுகின்றோம். ஏனெனில் இது வஹியில் உள்ளது அல்ல. இது மர்பூ.்.வாக நபி ﷺ அவர்கள் வரை சென்றதும் அல்ல. இது ஒரு ஸஹாபியின் சொல், செயல் ஆகும். இதைப் பின்பற்றுவது பித்அத், ஷிர்க் ஆகும். அப்படியானால் ஸஹாபாக்கள் பித்அத் செய்தார்களா? என்று ஒரு கேள்வி எழும்.

பதில் : ஸஹாபாக்கள் இப்படி வஹியில் இல்லாததை செய்யவுமில்லை; சொல்லவுமில்லை என்றே நாங்கள் கூறுகின்றோம். மேலும் மவ்கூப் விடயத்தில் முஹத்திஸீன்கள் இது மர்பூ.். என்று கூறியதாகவும் சொல்லவில்லை. நபித் தோழர்கள் நபியிடம் கேட்டிருக்கலாம் என்றே கூறுகின்றார்கள். இது சந்தேகத்திற்குரிய வாசகமாகும். நபி ﷺ அவர்கள் ‘‘சந்தேகத்தை விட்டு விட்டு சந்தேகமில்லாததின்பால் செல்'' என்று கூறிய ஸஹீஹான ஹதீஸ் காணப்படுகின்றது. எனவேதான் நாங்கள் சந்தேகமானதை விட்டுவிட்டு சந்தேகமில்லாத மர்பூ.்.வான செய்திகளைப் பின்பற்றுகின்றோம்.

05. பக்கம் 17ல் இஜ்மா.்., மவ்கூப் இவைகளை அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். யாரும் மறுக்கவில்லை என்றதொரு தவறான வாதத்தை முஹம்மது இஸ்தியாக் முன் வைத்து பொது மக்களை ஏமாற்றுகிறார்.

“அல்ஹுதீதுந் நபவி” என்ற நூலில் பக்கம் 283ல் முஹம்மது ஸப்பாவ் கூறுகிறார் : மவ்கூபைக் கொண்டு அமல் செய்வது வாஜிபல்ல. சில முஸ்லிம்கள் இதனை எடுக்கின்றார்கள். சில முஸ்லிம்கள் எடுப்பதில்லை. நாங்கள் அறவே இதனை எடுக்கமாட்டோம். காரணம் ஸஹாபாக்கள் என்பவர்கள் மனிதர்கள். மனிதர்கள் பிழையிலிருந்து விடுபட்டவர்கள் அல்ல. வஹி வந்து அவர்களைத் திருத்துவதுமில்லை. காரணம் வஹி நின்றுவிட்டது.

இதேபோன்று, இர்ஷாதுல் புஹூல் என்ற நூலில் பக்கம் 149இன் அடிக்குறிப்பில் அபூ முஸ்அப் பின்வருமாறு கூறுகின்றார். “இஜ்மாஉஸ் ஸஹாபாவுக்கு அறவே ஆதாரம் இல்லை.

151ம் பக்கத்தில் அல்லாமா ஷவ்கானி பின்வருமாறு கூறுகிறார். குலபாக்களின் இஜ்மாஉ பெரும்பான்மையானவர்களிடம் ஆதாரமாகக் கொள்ளப்படமாட்டாது.

எனவே, “யாரும் மவ்கூபை மறுக்கவில்லை” என்று முஹம்மது இஸ்தியாக் கூறுவது மக்களை ஏமாற்றுவதற்காகும்.

06. இலங்கை ஜமாஅதுல் முஸ்லிமீன் பாகிஸ்தான் ஜமாஅதுல் முஸ்லிமீனை விட்டும் பிரிந்து விட்டது என்று 17ம் பக்கத்தில் கூறுகிறார்.

பதில் : நாங்கள் ஜமாஅதுல் முஸ்லிமீனை விட்டும் பிரியவில்லை. ஜமாஅதுல் முஸ்லிமீனை விட்டும் பிரிவது இஸ்லாத்தில் இருந்து பிரிவதாகும். நாங்கள் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம்.

மஸ்ஊத் அஹ்மத் கொண்டு வந்ததும் இப்போது முஹம்மது இஸ்தியாக் இருப்பதாகக் கூறுவதும் ஜமாஅதுல் முஸ்லிமீன் அல்ல. அது ஒரு பிரிவாகும். காரணம் அவர்கள் வஹியுடன் பல விடயங்களைச் சேர்த்துள்ளனர்.

பஹ்மு ஸஹாபாவையும் மார்க்கமாக்கியுள்ளார். கியாஸும் காணப்படுகின்றது. ஸஹாதத் கலிமா இல்லாது பைஅத் எடுக்கிறார்கள். பைஅத் செய்தவருக்கு இலந்தை இலை போட்டு குளிக்க கட்டளை இடுவதில்லை. சம காலத்தில் இரண்டு ஜமாஅத் இருந்ததாகவும் அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் ﵁ அவர்கள் கலீபாவின் பைஅத்தை முறித்து விட்டிருந்தார் என்றும் நாங்கள் யாரையும் முஸ்லிம் இல்லாவர்கள் என்று சொல்லமாட்டோம் என்றும் பிழையான அகீதாவைக் கொண்டுள்ளதால், அது ஒரு பிரிவு என்பதனைக் கண்டு, அதிலிருந்து ஒதுங்கி விட்டோம். அல்ஹம்துலில்லாஹ். 1991ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அவர்களுடன் இணைவதற்கு முன்னர் நாங்கள் எவ்வாறு குர்ஆன், ஸுன்னா ஆகிய

இரண்டை மாத்திரம் பின்பற்றிக் கொண்டு ஜமாஅதுல் முஸ்லீமீனாக இருந்தோமோ, அவ்வாறே இன்றும் தொடர்ந்து வஹியை மாத்திரம் பின்பற்றிக் கொண்டு இருக்கின்றோம். முஹம்மது இஸ்தியாக்கின் அகீதாவுக்குள் பல மூலாதாரங்களை வைத்திருந்தாலும் இலங்கை வருகின்றபோது அதனை மறைத்து விட்டு, குர்ஆன், ஹதீஸ் மட்டுமே மார்க்கம் என்று மறைத்து சொல்லக் கூடியவராக இருந்தார். இவர்கள் தங்களது அகீதாவை எங்களிடம் மறைத்து வைத்திருந்ததால்தான் இவர்களுடன் நாங்களும் சேர்ந்திருக்க வேண்டி வந்தது. எப்பொழுது இவர்களின் சுயரூபம் எங்களுக்குத் தெரிய வந்ததோ, உடனே திருத்துவதற்கு முயற்சித்தோம். திருந்தவே மாட்டோம் என்று கூறியவுடன், இவர்கள் நபி ﷺ அவர்கள் முன்மொழியப்பட்ட ஜமாஅதுல் முஸ்லிமீன் அல்ல. மாறாக இவர்களும் ஒரு பிரிவினரே என்பதை அறிந்து நாங்கள் இவர்களை விட்டும் ஒதுங்கி விட்டோம். எனவே முஹம்மது இஸ்தியாக்கின் பிரிவில் உள்ளவர்கள் அதிலிருந்து ஒதுங்கி, இலங்கையில் இருக்கும் உண்மையான ஜமாஅதுல் முஸ்லிமீனில் இணைந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

07. இலங்கை ஜமாஅதுல் முஸ்லிமீன் ஹுக்மன் மர்பூ.்.வை ஏற்றுக் கொள்வதில்லை. இதனால் அவர்கள் குப்ரை செய்து விட்டார்கள் என்று ஒரு விமர்சனத்தை 19ம் பக்கத்தில் வைத்துள்ளார்.

பதில் : நபி ﷺ அவர்களுடைய காலத்தில் நபி ந அவர்களின் சொல், செயல், அங்கீகாரமும் குர்ஆனும் மட்டுமே ஆதாரமாக இருந்தது. ஹுக்மன் மர்பூ.்.  நபி ﷺ அவர்களுடைய காலத்தில் காணப்படவில்லை. நபி ﷺ அவர்களுடைய காலத்தில் இல்லாத ஒன்று எப்படி மார்க்கமாக முடியும்? வஹியில் இல்லாத ஒன்றை மார்க்கமாக்குபவர் இணைவைப்பாளராகுவார்.

எனவே மார்க்கத்தில் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் கூறாத ஒன்றை மார்க்கமாக்கி, இணைவைப்பாளராகி இருப்பது இலங்கை ஜமாஅதுல் முஸ்லிமீன் அல்ல. பாகிஸ்தானில் இருக்கும் முஹம்மது இஸ்தியாக்தான்.

08. இலங்கை ஜமாஅத் ‘தவாதுருல் அமலை’ ஏற்பதில்லை. அப்படியானால், மையித்தை எப்படி அடக்குவார்கள்? தொழு5கையில் எந்த இடத்தில் ஸலவாத் சொல்வார்கள்? இவ்விரண்டிற்கும் தவாதுருல் அமலில்தான் ஆதாரம் காணப்படுகின்றது என்று ஒரு அறிவீனமான விமர்சனத்தை முன்வைக்கின்றார்.

பதில் : மையித்தை அடக்கும் முறை, தொழுகையில் ஸலவாத் சொல்லும் முறை குர்ஆன், ஸுன்னாவில் வரவில்லை என்றால், எப்படியும் அடக்கலாம்; தொழுகையில் எந்த இடத்திலும் ஸலவாத் சொல்லலாம் என்பதே மார்க்கமாகும். குர்ஆன், ஸுன்னாவில் வரவில்லை என்பதற்காக மூன்றாவது ஒரு மூலாதாரத்தை (தவாதுருல் அமல்) எடுக்க முடியாது. அப்படி தவாதுருல் அமலை மார்க்கமாக எடுப்பது அல்லாஹ்வுக்கு இணைவைத்தலாகும்.

ஆனால் இவ்விரண்டிற்கும் ஸுன்னாவில் ஆதாரம் உள்ளது. இது மஸ்ஊத் அஹ்மதிற்கும் முஹம்மது இஸ்தியாக்கிற்கும் தெரியவில்லை என்பதற்காக புதியதொரு மூலாதாரத்தை மார்க்கத்தில் ஏற்படுத்த முடியுமா?

ஜனாஸாவை படுக்க வைத்து அடக்க வேண்டும் என்பது நபிவழியாகும். ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள் :

“**நான் நபி ﷺ அவர்களுக்கு முன் அவர்கள் தொழுது கொண்டிருக்கும்போது, ஜனாஸா வைப்பது போன்று தூங்குவேன்.**” ( ஆதாரம் : ஸஹீஹ் முஸ்லிம் - 512 )

மற்றுமொரு ஆதாரம்: **மரணித்தவரிடம் மலக்குகள் கேள்விகளைக் கேட்டபின் ஷஷபுது மாப்பிள்ளைத் தூங்குவது போன்று தூங்கு;; என்று கூறுவார்கள்** .

ஆதாரம் : (திர்மிதி - 375)

புது மாப்பிள்ளை நின்றவண்ணம் தூங்கவேமாட்டார். படுத்தவண்ணமே தூங்குவார் என்பது யாவரும் அறிந்த விடயமாகும். இவ்வாறு தெளிவான இரண்டு ஆதாரங்கள் இருக்க, மையித்தை அடக்க குர்ஆன், ஸுன்னாவில் ஆதாரம் இல்லை. தவாதுருல் அமலில்தான் ஆதாரம் இருக்கிறது என்றுகூறுவது மக்களை அல்லாஹ்வின் வஹியிலிருந்து திருப்புவதா? இல்லையா என்பதை வாசகர்கள் சிந்திக்க வேண்டும்.

தொழுகையில் ஸலவாத் ஓதும் இடம் குர்ஆன், ஸுன்னாவில் காணப்படவில்லை. இதுவும் தவாதுருல் அமலில்தான் வந்துள்ளது என்று மஸ்ஊத் அஹ்மதும் முஹம்மது இஸ்தியாக்கும் கூறுகின்றனர்.

விடயம் அவ்வாறல்ல, தவாதுருல் அமல் மார்க்கத்தில் கூட்டப்பட்டுள்ள ஒரு விடயமாகும். அல்லாஹ்வுக்கு இணைவைத்தலாகும். இதனை ஒரு முஸ்லிம் பின்பற்றக் கூடாது. ஸலவாத்தை எங்கே, எந்த இடத்தில் ஓதுவது என்பதை குர்ஆன், ஸுன்னாவில் தேட வேண்டும். இடம் குறிப்பிடவில்லை என்றால், எந்த இடத்திலும் ஓதலாம் என்றே ஒரு முஸ்லிம் முடிவெடுக்க வேண்டும்.

ஆனால் நாம் ஸுன்னாவில் தேடியபோது, தஷஹ்ஹுதில் ஸலவாத் ஓதுவதற்கு ஆதாரம் காணப்படுகின்றது. தஷஹ்ஹுத் ஓதி முடிந்தபிறகு, ஸலவாத் ஓதி துஆ கேட்க வேண்டும் என்று அபூதாவுதில் ஹதீஸ் வந்துள்ளது.

ஒருவர் அல்லாஹ்வைப் புகழாமலும், நபி ﷺ அவர்கள்மீது ஸலவாத் கூறாமலும் தொழுகையில் பிரார்த்தித்தார். இதனைக் கண்ட நபி ﷺ அவர்கள் ‘‘இவர் அவசரப்பட்டு விட்டார்’’ என்று கூறி, அவரை அழைத்து ‘‘உங்களில் ஒருவர் தொழுதால் முதலில் அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனை வாழ்த்தி, பிறகு நபி ﷺ அவர்கள் மீது ஸலவாத்துக் கூறி, பிறகு தனக்குத் தேவைப்பட்டதைக் கேட்கவும்’’ என்று கூற நான் கேட்டேன் என்று பழாலா கூறுகின்றார். இது அபூதாவுதில் 1481இலும் அஹ்மதில் 23937இலும் காணப்படுகின்றது.

இந்த ஹதீஸில் தொழுகையின் ஆரம்பமும் இறுதியும் கூறப்பட்டுள்ளன. இதில் தொழும் ஒருவர் இறுதியில் தஷஹ்ஹுத் ஓத வேண்டும், பிறகு நபி ﷺ அவர்கள் மீது ஸலவாத்து ஓத வேண்டும் அதன் பிறகு துஆ கேட்க வேண்டும் என்று மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. விடயம் இவ்வாறிருக்க, மையத்தை அடக்கவும், தொழுகையில் ஸலவாத்து ஓதும் இடமும் வஹியில் வரவில்லை; தவாதுருல் அமலில்தான் வந்துள்ளது என்று மஸ்ஊத் அஹ்மத், மற்றும் முஹம்மது இஸ்தியாக் ஆகியோர் வாதிடுவது எப்படிப்பட்ட பிழை என்பதை நன்கு கவனிக்கவும்.

இந்த இடத்தில் இவ்விருவரினதும் ஒரு முரண்பாட்டையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மஸ்ஊத் அஹ்மத் தனது ‘‘ஜமாஅதுல் முஸ்லிமீன் அப்னீ த.்.வத் ஓர் தஹ்ரீகே ஆயினாமே’’ என்ற நூலில் 532ம் பக்கத்தில் நபி ﷺ அவர்களுடைய காலத்தில் மையத்தைப் படுக்க வைத்து அடக்கப்பட்டது என்று கூறுகின்றார். நபி ﷺ அவர்களுடைய காலம் என்றால், அது ஹதீஸ் என்பது தெளிவான விடயமாகும். இப்படிச் சொல்லிவிட்டு, அதே இடத்தில் ஹதீஸிற்கு மாற்றமாக தவாதுருல் அமலை ஒருவர் ஏற்காவிட்டால், மையத்தை எப்படி அடக்குவது என்றும் கேட்டு, ஒரு முரண்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

இதேபோன்றே மற்றுமொரு இடத்தில் இஜ்மாஉஸ் ஸஹாபாவை ஏற்காதவர்கள் காபிர்கள் என்று கூறிவிட்டு, அதற்கு மாற்றமாக ஒரு கருத்தை அதே நூலில் பின்வருமாறு எழுதியுள்ளார். அதாவது ‘‘நாங்கள் வானத்திலிருந்து இறக்கப்பட்டதை மட்டும் பின்பற்றுகின்றோம். அஹ்லே ஹதீஸ் இஜ்மாஉஸ் ஸஹாபாவையும் பின்பற்றி அவர்கள் வழிகேட்டில் இருக்கிறார்கள்’’ என்ற முரண்பாட்டை வெளிப்படுத்தியுள்ளதை வாசகர்கள் பார்க்கவும்.

சுருக்கம் என்னவெனில், மையத்தை அடக்கவும், தொழுகையில் ஸலவாத்து ஓதவும் ஸுன்னாவில் ஆதாரம் உள்ளது. இதற்கு தவாதுருல் அமல் தேவைப்படாது. அது மார்க்கமும் அல்ல.

ஒரு முஸ்லிம் வஹியைத் தவிர வேறு எதுவும் மார்க்கம் இல்லை என்ற விடயத்தில் உறுதியாக இருக்க வேண்டும். இது மட்டுமே மு.்.மின்களின் பாதையாகும். இதற்கு அல்குர்ஆனில் வந்துள்ள ஒரு ஆதாரத்தை முன்வைக்கின்றோம். :

**உமக்கு வஹி மூலம் அறிவிக்கப்பட்டதை நீர் பற்றிப் பிடிப்பீராக! நிச்சயமாக நீர் நேரான வழியில் இருக்கின்றீர். நிச்சயமாக இது உமக்கும் உமது சமூகத்திற்கும் நல்லுபதேசமாகும். பின்னர் விரைவில் (இது குறித்து) நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள்.**

(அல்குர்ஆன் 43 : 43,44)

இந்த ஆயத்தில் வஹியைப் பிடிப்பவர் நேர்வழியில் இருக்கின்றார் என்பதும் இந்த வஹியே நபி ﷺ அவர்களுக்கும் அவர்களின் உம்மத்திற்கும் உரியது என்பதும் தெளிவாக இருக்கின்றது. இஜ்மாஉஸ் ஸஹாபா, தவாதுருல் அமல் வஹியில் உள்ளது அல்ல.

முஹம்மது இஸ்தியாக் தனது வெளியீட்டில் பக்கம் 20ல் ஸஹாபாக்களின் இஜ்மாஉம் மார்க்கம் என்று மஸ்ஊத் அஹ்மத் ரஎழுதியிருப்பதாக கூறுகின்றார். ஆனால் இஜ்மாஉஸ் ஸஹாபா மார்க்கம் என்பதற்கு மஸ்ஊத் அஹ்மத் எந்தவொரு ஆதாரத்தையும் முன் வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஒருவரின் கூற்றை ஆதாரமின்றி நம்புவது தக்லீத் என்று அவரே எழுதியிருக்கின்றார். பின்னர் எவ்வித ஆதாரமுமின்றி மஸ்ஊத் அஹ்மத் கூறியதை அப்படியே தக்லீத் செய்து இஜ்மாஉஸ் ஸஹாபாவைப் பின்பற்றுகின்றார்.

தனது வெளியீட்டில் பக்கம் 20ல் மேலும் ஒரு அவதூறைக் கூறியிருக்கின்றார். அதாவது “நான் இலங்கைக்கு சுமார் 17 வருடங்களாகப் போய் வருகின்றேன். போகும் போதெல்லாம் அவர்கள் அதிகமாக கேள்விகளைக் கேட்டுக் கேட்டே வழிகெட்டு விட்டார்கள். மேலும் ஸுன்னத்தை விட்டுவிட ஆரம்பித்து விட்டார்கள். ஸுன்னத்துக்களை விடுவது பாவமில்லை என்றும் கூறுகின்றார்கள் என்று 3 அவதூறுகளை முன் வைத்துள்ளார்.

**அவைகளுக்கான பதில் :**

01: அதிகமாகக் கேள்வி கேட்கிறார்கள் - அல்லாஹுத்தஆலா அல்குர்ஆனில் தெரியாதவர்கள் தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் என்று கூறுகின்றான். இதனடிப்படையில் தங்களுக்குத் தெரியாதவைகளை முஹம்மது இஸ்தியாக்கிடம் கேட்பார்கள். காரணம் கேள்வி - பதில் என்று ஒரு நிகழ்ச்சியை அவர்தான் ஏற்பாடு செய்வார். இதில் என்ன தவறிருக்கிறது.

அதேநேரத்தில், அதிகமாகக் கேட்கிறார்கள் என்ற குற்றச்சாட்டிற்கு பதில் : 17 வருடங்களாக இலங்கை வருவது உண்மையே. அதே நேரத்தில் ஒவ்வொரு முறையும் வந்து ஒரு பித்னாவைக் கிளப்பி விடுவார். ஒருமுறை வந்து,“ பள்ளிக்குள் தஹிய்யதுல் மஸ்ஜித் ஒருமுறை தொழுதால் போதும் ” என்று ஒரு புதிய பித்னாவைக் கிளப்பினார். அடுத்த வருடம் வந்து “பள்ளிக்குள் ஸுத்ரா தேவை இல்லை” என்று கூறினார். அதற்கடுத்த வருடம் வந்து தாடியை அகலம், நீளத்தால் வெட்டலாம்” என்று ஒரு குளப்பத்தைப் போட்டார். அதற்கடுத்த வருடம் வந்து, ஒருவர் இரண்டாவது, மூன்றாவது திருமணம் முடிப்பதாக இருந்தால், முதல் மனைவியிடம் அனுமதிக் கடிதம் தேவை என்று மார்க்கத்தில் இல்லாத ஒன்றைக் கடமையாக்கினார். அடுத்த முறை வந்து, விரும்பி திருமணம் செய்திருந்த இருவரை, கணவனின் முதல் மனைவியின் பேச்சைக் கேட்டு அத்திருமணத்தை “பஸ்ஹு” செய்து பிரித்து வைத்தார். அடுத்த முறை வந்து ஒருவர் கேள்வி கேட்டபோது, “ஒருவர் கலிமா மட்டும் சொன்னால் போதும், அவர் முஸ்லிமாகி விடுவார் என்றதொரு குழப்பத்தை ஏற்படுத்தினார்.

இவ்வாறு ஒவ்வொரு முறையும் பல குழப்பங்களைச் செய்து கொண்டிருந்ததால், முஸ்லிம்களுக்கு சந்தேகங்கள் ஏற்பட்டு, மார்க்கத்தை சரியாக விளங்க வேண்டும் என்று பல கேள்விகளைக் கேட்பார்கள். இதற்குக் காரணம் அவர்தான் என்பது உண்மை.

02. ஸுன்னாக்களை விட ஆரம்பித்து விட்டார்கள் :

ஸுன்னாக்களை விடுவது நாங்களா? அல்லது முஹம்மது இஸ்தியாக்கா? பள்ளிக்குள் தஹிய்யதுல் மஸ்ஜித் ஒருமுறை தொழுதால் போதும், பள்ளிக்குள் ஸுத்ரா தேவையில்லை, இறப்பர் செருப்பை நின்ற வண்ணம் அணியலாம், தாடி நீளமாக இருந்தால் கத்தரிக்கலாம் என்று ஸுன்னாக்களைக் குழி தோண்டிப் புதைப்பது யார்?

இலங்கை ஜமாஅதுல் முஸ்லிமீன் ஸுன்னாக்களை விட்டுள்ளது என்பதை முஹம்மது இஸ்தியாக்கால் நிரூபிக்க முடியுமா? இஜ்மாஉஸ் ஸஹாபா, மவ்கூப், ஹுக்மன் மர்பூ.ஃ. இவைகள் மஸ்ஊத் அஹ்மதிடத்திலும், முஹம்மது இஸ்தியாக்கிடத்திலும் நபி வழியாகும். இலங்கை வந்த நேரத்தில் “இது நபி வழியா” என்று கேட்க, நீங்கள் விரும்பினால், செய்யுங்கள், விரும்பாவிட்டால் விட்டு விடுங்கள்” என்று அவரின் பார்வையில் உள்ள ஸுன்னாவை விட்டுவிட அனுமதித்தது யார்?

மஸ்ஊத் அஹ்மதினதும், முஹம்மது இஸ்தியாக்கினதும் அகீதா “இஜ்மாஉஸ் ஸஹாபா ஹதீஸின் ஒரு பகுதி” என்பதாகும். அதாவது வஹியாகும். ஆனால் நாங்கள் இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்பதனை இவர் தெரிந்து கொண்டதும், இவருடன் எங்களைத் தக்க வைத்துக்

கொள்வதற்காக “நீங்கள் விரும்பினால், இஜ்மாஉஸ் ஸஹாபாவைப் பின்பற்றுங்கள்; இல்லாவிட்டால் விட்டு விடுங்கள் ” என்று ஒரு தீர்ப்பை வழங்கினார். அவருடைய பார்வையில் அது ஹதீஸாக, வஹியாக இருக்கும்போது, எப்படி அதனை விட்டு விடும்படி அவர் கூறுவார்? இது ஒரு நாடகமல்லவா?

இதேபோன்று தற்போது முஹம்மது இஸ்தியாக்குடன் சேர்ந்திருப்பவர்கள் கூட சுயநலத்திற்காக வேண்டி தற்போதுதான் இஜ்மாஉஸ் ஸஹாபாவைப் பின்பற்ற வேண்டும் என்று வாதிடுகின்றனர். ஆனால் சுமார் 25 வருடங்களாக இவர்கள் எம்முடன் இணைந்திருந்தபோது குர்ஆன், ஸுன்னா மட்டுமே மார்க்கம் என்று நம்பி பைஅத் செய்திருந்தனர். இவர்களுக்கு முஹம்மது இஸ்தியாக் மறைத்து வைத்திருந்த கொள்கை தெரியாது. அதனால் முஹம்மது இஸ்தியாக் 2015ம் வருடம் நவம்பர் மாதம் இறுதியாக இலங்கை வந்தபோது, இவர்கள் அவரிடம் “இஜ்மாஉஸ் ஸஹாபா இஸ்லாத்தின் மூலாதாரமா” என்று கேள்வி கேட்டனர். அதற்கு அவர், “இல்லை. இது முனஸ்ஸல் மினல்லாஹ் இல்லை” என்று கூறி, கொஞ்ச நபர்களையாவது தக்கவைத்துக் கொள்ள பொய் கூறினார். அப்படியானால் உங்களுடைய இந்த முடிவை எழுதித் தாருங்கள் என்று கேட்டதற்கு, “பாகிஸ்தான் போய் எழுதி அனுப்புகிறேன்” என்று சமாளித்துச் சென்று விட்டார். ( ஓடியோ பதிவு இருக்கின்றது). பாவம், இவருடைய இந்த பதிலை நம்பிய இவருடைய ஸஹாக்கள் எங்களை நோக்கி, வட்ஸ்ஸ்ப் மூலம் “ எங்களது அமீர் இஜ்மாஉஸ் ஸஹாபா மார்க்கம் இல்லை என்று கூறிவிட்டாரே! அநியாயமாக நீங்கள் எங்களை விட்டு ஒதுங்கிவிட்டீர்களே!” என்று கேட்டு சந்தோஷப்பட்டனர். பாவம், அந்த சந்தோஷம் நீடிக்கவில்லை. இஜ்மாஉஸ் ஸஹாபா மார்க்கம் இல்லை என்று எழுதி அனுப்புவதாகக் கூறிச் சென்றவர், “இஜ்மாஉஸ் ஸஹாபா மார்க்கமாகும்” என ஒரு புத்தகம் எழுதி அனுப்பி வைத்தார். மெல்லவும் முடியாத, விழுங்கவும் முடியாத இங்குள்ள அவருடைய ஸஹாக்கள், கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ள அவருடைய கொள்கைக்கு மாறினார்கள்.

இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால், முஹம்மது இஸ்தியாக் பாகிஸ்தானில் உள்ளவர்களிடம் இஜ்மாஉஸ் ஸஹாபா மார்க்கம் என்று கூறுவதும், இலங்கை வருகின்றபோது இஜ்மாஉஸ் ஸஹாபா மார்க்கம் இல்லை என்று கூறி நடித்துக் கொண்டு எம்மை ஏமாற்றிக் கொண்டிருந்துள்ளார். இதற்கு பல ஆதாரங்கள் இருந்தாலும் ஒரு ஆதாரத்தை முன்வைக்கின்றோம்.

இவர் இறுதியாக கடந்த 2015 நவம்பர் மாதம் இலங்கை வந்தபோது, எம்முடன் சேர்வது சாத்தியப்படாது என்பதை அறிந்து, எம்மை விட்டு ஏற்கனவே முர்தத்தாகிச் சென்ற ஹிபதுர் ரஹ்மான் என்பவருடன் இணைவதற்கு பேச்சு வார்த்தை நடாத்தினார். அப்போது அவர் “இஜ்மாஉஸ் ஸஹாபா மார்க்கமா” என்று கேள்வி கேட்டார். அதற்கு இவர், “இல்லைதான், இருந்தாலும் பாகிஸ்தானில் உள்ளவர்கள் பல வருடங்களாகப் பின்பற்றிக் கொண்டு வருகின்றார்கள். இவர்களிடம் திடீரென இஜ்மாஉஸ் ஸஹாபா மார்க்கம் இல்லை என்று கூறினால் குழம்பி விடுவார்கள். எனவே இஜ்மாஉஸ் ஸஹாபா மார்க்கம் இல்லை என்ற அடிப்படையில் நாம் ஒன்றினைவோம். நான் பாகிஸ்தானில் உள்ளவர்களிடம் மெது

மெதுவாகக் கூறி அவர்களை மாற்றிவிடுவேன்'' என்று கூறியுள்ளார். இருந்தும் தலைமைத்துவப் பிரச்சினையால் விஷயம் கைக்கூடவில்லை. அவரிடமும் பொய் கூறி, அவரையும் ஏமாற்றி, தன்னிடம் இணைத்துக் கொள்ளவே முயற்சித்துள்ளார். என்ன பொய்யைக் கூறியாவது தன்னுடைய இயக்கத்திற்கு ஆள் சேர்ப்பதே இவருடையதும், இவருடன் இருக்கக் கூடிய முக்கிய நபர்களினதும் நோக்கமாகும்.

இதனால்தான் செய்னுல் ஆப்தீனும் முஹம்மது இஸ்தியாக்கடைய மகன் ஸுப்யானும் சேர்ந்து ஒரு நாடகம் நடித்து அதனை ஓடியோ கிளிப்பாக இலங்கைக்கு அனுப்பி வைத்தனர். அதில் ஒருவர் கேள்வி கேட்க, மற்றவர் பதில் கூறுகிறார். இதில் சாரம்சம் இஜ்மாஉஸ் ஸஹாபா மார்க்கம் இல்லை என்பதாகும். இதன் ஓடியோ பதிவு உள்ளது. இவர்கள் இருவரும் பாகிஸ்தானில் உள்ளவர்களுக்குத் தெரியாமல் இலங்கையில் உள்ளவர்களை ஏமாற்ற போட்ட திட்டமே இதுவாகும்.

இவ்வாறு இவர்கள் அனைவரும் எங்களை வழிகெடுக்க முயற்சித்து விட்டு, எங்களைப் பார்த்துக் கூறுகின்றார்கள், "நாங்கள் ஸுன்னாவை விட ஆரம்பித்து விட்டோம்'' என்று. உண்மைதான். நாங்கள் நபி ﷺ அவர்களுடைய ஸுன்னாவை விட வில்லை. உங்களை நம்பி, எங்களிடம் தெரியாத்தனமாகப் புகுந்து விட்ட உங்களுடைய ஸுன்னாக்களான எத்தனையோ விடயங்களை இதுவரை விட்டிருக்கின்றோம். தொடர்ந்தும் ஆய்வுகள் செய்து கொண்டிருக்கிறோம். எனவே நாங்கள் வஹியை விட்டுவிடவில்லை. நீங்கள்தான் வஹியாகிய ஸுன்னாவை விட்டு விட்டு எதைஎதையெல்லாமோ பின்பற்றுகின்றீர்கள்.

3. ஸுன்னத்தை விடுவது பாவமில்லை :

இலங்கை ஜமாஅதுல் முஸ்லிமீன் ஸுன்னாவை விடுவது பாவமில்லை என்று கூறுகின்றது என்று பாகிஸ்தான் மக்களுக்கு மத்தியில் இலங்கை ஜமாஅத்தைப் பற்றி தீய எண்ணத்தை உண்டாக்கி இதனைப் பரப்பியுள்ளார். நடந்தது என்ன?

மஸ்ஊத் அஹ்மத் "தர்கே ஸுன்னத் குனாஹே'' என்ற நூலில் ஸுன்னத்தை விடுவது பாவம் என்று கூறி, அதற்கு பல ஆதாரங்களை முன்வைத்துள்ளார். அதை நாங்கள் படித்து விட்டு, மஸ்ஊத் அஹ்மத் அவர்களால் முன்வைக்கப்பட்ட ஆதாரங்கள் சரியானதாக இல்லை. இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நாம் கூறினோம்.

ஸுன்னத்தை விடுவது பாவமா? இல்லையா? என்றால், பாவமானதும் இருக்கின்றது; பாவமில்லாததும் இருக்கின்றது. உதாரணம் : மஃரிபிற்கு முன்னர் இரண்டு ரக்அத்துக்கள் தொழுவது நபி வழிதான். ஆனால் இதனை விடுவது பாவமில்லை. எங்கள் பிரச்சினை இதுவல்ல. மஸ்ஊத் அஹ்மத் கொண்டு வந்த

ஆதாரங்கள் சரியா? இதுவே எங்கள் கேள்வி. முஹம்மது இஸ்தியாக் எங்களுக்குச் செய்த அனைத்து மோசடிகளுக்கும் அவர் மறுமையில் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

**12. முஹம்மது இஸ்தியாக் தனது வாதத்தை நிறுவுவதற்கு முன்வைக்கும் மற்றுமொரு ஆதாரம் :** (பக் : 21 )

**யார் எனது ஸுன்னாவை வெறுக்கிறார்களோ, அவர்கள் என்னைச் சேர்ந்தவர்கள் அல்ல.** (ஸஹீஹுல் புகாரி )

இந்த ஹதீஸைக் கொண்டு வந்து ஏதோ நாங்கள் ஸுன்னாவை வெறுப்பதுபோல் சித்தரிக்கின்றார். ஸுன்னாவில் கைவைத்தது நாங்களா? முஹம்மது இஸ்தியாக்கா? இலங்கை ஜமாஅதுல் முஸ்லிமீனின் பணிகளில் ஒன்று, பித்அத்துக்களை ஒழித்து, ஸுன்னாக்களை உயிர்ப்பிப்பதாகும். இதனால்தான் மின்ஹாஜுல் முஸ்லிமீனிலிருந்து பல பித்அத்துக்களை அகற்றி, ஸுன்னாக்களை உயிர்ப்பித்துள்ளோம்.

ஒவ்வொரு மாதமும் நடைபெறும் எங்களது மஜ்லிஸுஸ் ஸுராவில் மின்ஹாஜுல் முஸ்லிமீனில் காணப்படக் கூடிய விடயங்கள் மற்றும் எங்களிடம் நடைமுறையில் உள்ள இபாதத்துக்களை ஆய்வு செய்ததில் 30ற்கும் மேற்பட்ட விடயங்களை லயீபானதாகவும், மற்றும் மவ்கூபாகவும் கண்டு விட்டிருக்கின்றோம். இன்ஷா அல்லாஹ் இன்னும் தொடர்ந்து நடக்கவிருக்கின்ற ஒவ்வொரு மஜ்லிஸுஸ் ஸுராவிலும் ஆய்வுகள் செய்து பிழையான விடயங்களை விட்டும் தவிர்ந்து நடப்போம்.

இதனைத்தான் இவர்கள் நாங்கள் ஸுன்னாக்களை விடுவதாக எம்மீது குற்றம் சாட்டுகின்றார்கள். நஊதுபில்லாஹி மின்ஹா. மார்க்கத்தின் பெயரால் உள்ள பித்அத்துக்களை எல்லாம் சேர்த்து பின்பற்றிக் கொண்டு நரகம் செல்ல வேண்டிய அவசியம் எங்களுக்கில்லை. குறைந்தளவு இபாதத்துக்களாக இருந்தாலும், அவைகள் அல்லாஹ்வினாலும் அவனுடைய தூதரினாலும் அங்கீகரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள் :

**யார் எங்களுடைய இந்த (மார்க்க) விவகாரங்களில் இல்லாததை புதிதாக உண்டாக்குகிறாரோ, அது நிராகரிக்கப்படும்**. (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்படாத ஒரு செயலை நாம் ஏன் செய்ய வேண்டும்? சரி அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் பரவாயில்லை, ஒரு சம்பிரதாயத்திற்காக இந்த இபாதத்தை செய்கிறோம் என்று கூறி இந்த செயல்களைச் செய்யலாமா? முடியாது; ஏனெனில் மார்க்கத்தில் இல்லாத ஒன்றைப் புகுத்துவதுதான் பித்அத்தாகும். பித்அத்துக்களெல்லாம் நரகத்திற்கே இட்டுச் செல்லும். பின்வரும் ஹதீஸை சற்று கவனியுங்கள் :-

**விடயங்களில் மிகக்கெட்டது புதிதாக உண்டாக்குபவைகளாகும். புதிதாக உண்டாக்குபவைகள் அனைத்தும் வழிகேடாகும். வழிகேடுகள் அனைத்தும் நரகம் செல்லும்.** (ஹதீஸ் சுருக்கம்)

புதிதாக உண்டாக்கப்படுபவைகள் நபி ﷺ அவர்களுடைய காலத்திற்குப் பிறகு நடக்கக் கூடியவைகளாகும். அதாவது வஹி இறங்காத காலத்தில் நடப்பவைகளாகும். நபி ﷺ அவர்கள் வரை செல்லாத ஸஹாபாக்களின் பெயரால் கூறப்படுகின்றவற்றை முஹம்மது இஸ்தியாக்கும் அவரைச் சார்ந்தவர்களும் பின்பற்றுகின்றனர். இவர்களிடம் இந்தச் செயல் வஹிதான் என்று உறுதியாக கூற முடியுமா என்று கேட்டால், நபி ﷺ அவர்களிடமிருந்து ஸஹாபாக்கள் கேட்டிருக்கலாம் அல்லது பார்த்திருக்கலாம் என்று யூகத்தின் அடிப்படையில் கூறுகின்றனர். உறுதியாக நபி ﷺ அவர்கள் வரை சென்றுள்ளது என்று கூற முடியாத விடயங்களை யூகத்தின் அடிப்படையில் எவ்வாறு பின்பற்றுவது?

**பூமியிலுள்ளவர்களில் அதிகமானோருக்கு நீர் வழிப்பட்டால், அவர்கள் அல்லாஹ்வின் பாதையை விட்டும் உம்மை வழிகெடுத்து விடுவார்கள். அவர்கள் வெறும் யூகங்களையேப் பின்பற்றுகின்றனர். அவர்கள் கற்பனை செய்வோரேயன்றி வேறில்லை.** (06:112)

**அவர்கள் வெறும் யூகத்தையும் தங்கள் மனம் விரும்புவதையுமே பின்பற்றுகின்றனர். நிச்சயமாக அவர்களுடைய இரட்சகனிடமிருந்து நேர்வழி அவர்களிடம் வந்தே இருக்கின்றது.** (53:23)

இதேபோன்று அல்குர்ஆனில் 4:157, 6:148, 10:36, 10:66, 49:12, 53:28 போன்ற வசனங்களிலும் வழிகேடர்கள் யூகத்தையேப் பின்பற்றுகின்றனர் என்று அல்லாஹ் கூறுகின்றான். அதுமாத்திரமன்றி إِنَّ الظَّنَّ لَا يُغْنِي مِنَ الْحَقِّ شَيْئًا "**நிச்சயமாக யூகம் சத்தியத்திற்கு எப்பயனையும் அளிக்காது**'' என்றும் அல்லாஹ் கூறுகின்றான்.

அவர்கள் பின்பற்றுகின்ற இந்த மவ்கூபான விடயங்கள் பிழை என்பதற்கு அந்த மவ்கூபிலிருந்து கூட ஆதாரங்களைக் காட்டலாம். இதனால் நாங்களும் மவ்கூபைப் பின்பற்றுகின்றோம் என்பது அர்த்தமல்ல. நாங்கள் மவ்கூபின் பக்கம் தலைவைத்துக் கூட தூங்கமாட்டோம். சிலவேளைகளில் மத்ஹபைப் பின்பற்றுபவர்களிடத்தில் சென்று "மத்ஹபைப் பின்பற்றக் கூடாது; குர்ஆன், ஸுன்னாவாகிய இந்த இரண்டை மாத்திரமே பின்பற்ற வேண்டும்'' என்று கூறினால், அவர்கள் "இமாம்கள் இல்லாமல் எப்படி உங்களுக்கு ஹதீஸ்கள் கிடைத்தன? அவர்கள்தானே ஹதீஸ்களை மிகவும் சிரமப்பட்டு ஒன்று திரட்டியவர்கள்; அவர்கள் வஹியில் இஸ்லாத்தைப் பின்பற்றுவார்களா?'' என்று கேட்பார்கள். இந்த நேரத்தில் நாங்கள் மத்ஹபிலிருந்தே இவர்களுக்கு ஆதாரங்களைக் காட்டுவதுண்டு. உதாரணமாக : "மனிதன் என்ற வகையில் நான் தவறு செய்திருக்கலாம்; எனவே நான் எழுதியுள்ளவைகளில் ஏதாவது குர்ஆன், ஸுன்னாவுக்கு மாற்றமாக இருந்தால், என்னுடைய கருத்தைத் தூக்கி சுவற்றிலே எறிந்து விடுங்கள் என்று இமாம் ஷாபி அவர்களே கூறியிருக்கின்றார்களே'' என்று நாம் அவர்களுக்கு விளக்கப்படுத்துவதுண்டு. இதனால் நாம் மத்ஹபைப் பின்பற்றுகின்றோம் என்றோ அல்லது அதனை ஆதரிக்கின்றோம் என்றோ அர்த்தமல்ல.

இவ்வாறு, எவ்வளவுதான் குர்ஆன், ஸுன்னாக்களிலிருந்து ஆதாரங்களைக் காட்டியும் விளங்காதவர்களுக்கு, நீங்கள் பின்பற்றக் கூடிய அந்த மவ்கூபான விடயங்களிலேயே, அதனைப் பின்பற்றக் கூடாது என்பதற்கான ஆதாரங்கள் பல இருக்கின்றன.

ஒருவரது வீட்டிற்குச் சென்று 3 முறை ஸலாம் கூறியும் பதில் கிடைக்காததால், திரும்பிச் செல்வது சம்பந்தமாக நபி ﷺ அவர்கள் கூறியதாக

ஒரு ஸஹாபி கூறியபோதுகூட, சாட்சியோடு வந்து கூறும்படி உமர் ﷺ அவர்கள் கட்டளையிட்டு, சாட்சி கூறப்பட்ட பிறகே அதாவது நபி ﷺ அவர்கள் வரைக்கும் சென்றுள்ளதை உறுதிப்படுத்திய பிறகே அதனை ஏற்றுக் கொண்டதாக மவ்கூபான அறிவிப்புக் காணப்படுகிறது. இவ்வாறே இப்னு உமர் ﷺ அவர்களிடம் உம்ரா சம்பந்தப்பட்ட ஒரு விடயத்தில் "உங்களது தகப்பன் இவ்வாறு கூறுகின்றாரே!" என்று கூறப்பட்ட சமயத்தில் "அல்லாஹ்வும் தூதரும் உங்களுக்கு போதுமானதில்லையா" என்று இப்னு உமர் ﷺ அவர்கள் கேட்டதாகவும் ஒரு மவ்கூபான வரலாறு காணப்படுகின்றது.

இவைகள் எங்களுக்கு ஆதாரமல்ல. நாங்கள் அல்லாஹ்வுடைய தூதரும், அருமை ஸஹாபாக்களும், நேர்வழி பெற்ற கலீபாக்களும், மு.ஃமின்களும் வஹியை மாத்திரமே பின்பற்றினார்கள் என்றே நம்புகின்றோம். குர்ஆன், ஸுன்னாவுக்கு மாற்றமில்லாத ஒரு வரலாறு காணப்படுமானால், வெறுமனே அதனை நம்புவோமே தவிர, நாம் பின்பற்றுவது வஹியை மாத்திரமேயாகும்.

இந்த இடத்தில் இன்னொரு விடயத்தையும் கூறவேண்டியிருக்கின்றது. அதாவது மவ்கூபான அறிவிப்புக்களை முஹம்மது இஸ்தியாக்கும் அவரைச் சார்ந்தவர்களும் பின்பற்றுகின்றனர். மவ்கூப் என்றால் என்ன? நபி ﷺ அவர்கள் வரைக்கும் சென்றிராத அறிவிப்பாகும். அதாவது அந்த அறிவிப்பில் நபியவர்கள் விடுபட்டிருப்பார்கள். அதேநேரத்தில் இவர்கள் லயீபான, மவ்ழூவான, முர்ஸலான ஹதீஸ்களைப் பின்பற்றுவதில்லை. (நாமும் பின்பற்றுவதில்லை). முர்ஸலான ஹதீஸ்களை பின்பற்றாமைக்குக் காரணம் என்ன? முர்ஸலான ஹதீஸ் என்றால், அந்த அறிவிப்பு நபி ﷺ அவர்கள் வரை சென்றிருக்கும், ஆனால் இடையில் ஒரு தபவுத் தாபியீன் அல்லது ஒரு தாபியீ அல்லது ஒரு ஸஹாபி விடுபட்டிருப்பார். நபி ﷺ அவர்கள் விடுபடாமல் வேறு ஒருவர் விடுபட்ட முர்ஸலான ஹதீஸை இவர்கள் பின்பற்றுவதில்லை. ஆனால் நபி ﷺ அவர்களே விடுபட்டுப்போன மவ்கூபான இஜ்மாஉஸ் ஸஹாபாவை இவர்கள் பின்பற்றுகின்றார்கள். என்ன நியாயம் இது? எவ்வளவு பெரிய மடமைத்தனம்?

**13. முஹம்மது இஸ்தியாக் இறுதியாக ஒரு செய்தியைக் கொண்டு வந்து, தன் அகீதாவை நிறுவ முயலும் ஆதாரம் :** பக்கம் : 22

**எனது தோழர்கள் நினைவூட்டப்பட்டால் மௌனமாகிவிடுங்கள். இதேபோன்று நட்சத்திரம், கத்ர் ஆகியவை விடயத்திலும் மௌனமாகிவிடுங்கள்.**

இந்த செய்தி மர்பூ.ஃவான செய்தியல்ல. இது நபி ﷺ அவர்கள் வரை செல்லவில்லை. இது இப்னு மஸ்ஊதின் கூற்றாகும். இதற்கு பல வழிகள் காணப்பட்டாலும் அனைத்து வழிகளும் பலயீனமானவையே. இந்த வழிகளில் சில, சிலதைப் பலப்படுத்துகின்றது என்று அல்பானி கூறுகின்ற போதிலும் அதை ஒரு முஸ்லிம் ஏற்க முடியாது.

முஹம்மது இஸ்தியாக் இஜ்மாஉஸ் ஸஹாபா, மவ்கூபை ஆதாரமாக எடுக்கலாம் என்று வாதிக்கிறார். அதற்கு ஆதாரமாக மவ்கூபைக் காட்டுகிறார். இவர் தன் வாதத்தை நிறுவ, குர்ஆன், ஸுன்னாவிலிருந்து ஆதாரம் காட்ட வேண்டும். மவ்கூப் மார்க்கத்தில் உள்ளது அல்ல என்று ஒருவர் வாதிக்கும்போது இல்லை அது மார்க்கத்தில் உள்ளதுதான் என்று மவ்கூபையே ஆதாரமாகக் காட்ட முடியுமா? இவ்வளவு கூட முஹம்மது இஸ்தியாக் சிந்திக்கவில்லை என்பது தெரியவருகின்றது.

குறிப்பு : இப்னு மஸ்ஊத் வ அவர்களின் இந்த மவ்கூபான செய்தியை ஏன் வரலாற்றில் பதிந்து அதனை நம்புகின்றார்கள் என்றால், இலங்கை ஜமாஅதுல் முஸ்லிமீனைத் தவிரவுள்ள பிரிவுகள், மத்ஹபுகள், அமைப்புகள் அனைத்தும் நபி ﷺ அவர்களுக்குப் பிறகு ஸஹாபாக்களுக்கு மத்தியில் பிரிவுகள், பிளவுகள், சண்டை, யுத்தம், கொலை, பைஅத்தை முறித்தல், இரண்டு ஜமாஅதுல் முஸ்லிமீன் உருவாகியது, ஹர்ரா யுத்தம் போன்ற போலிச் செய்திகளை நம்புகிறார்கள். இதில் முஹம்மது இஸ்தியாக்கும் விதிவிலக்கல்ல.

இந்தப் போலிச் செய்திகளை படிக்கும்போது பாமர மக்கள் ''ஸஹாபாக்கள் இப்படியெல்லாம் செய்திருக்கிறார்களே!'' என்று நினைத்து விடுவார்கள் என்று பயந்தே, அவர்களை ஆறுதல்படுத்த இந்த மவ்கூபான செய்தியை வரலாற்றில் வரைந்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது.

இலங்கை ஜமாஅதுல் முஸ்லிமீன் இந்த போலி வரலாறுகளை நம்புவதில்லை. இதனால் இந்த மவ்கூபான செய்தி உண்மையானது அல்ல என்றும் நபிமொழி அல்ல என்றும் நம்புகின்றோம். அருமைத் தோழர்கள் மேற்கூறப்பட்ட வரலாற்றுச் செய்திகளான ஷிர்க், பித்அத்துக்களிலிருந்து நிரபராதிகளாவார்கள் என்று நம்புகின்றோம்.

இதேபோன்றுதான் ஸஹாபாக்களைப் பின்பற்றும்படி வஹியின் ஒளியில் எவ்வித ஆதாரமுமில்லை. நபி ﷺ அவர்களுடன் வஹி முற்றுப்பெற்று விட்டது. அந்த வஹியோடு நாங்களும் நின்று கொண்டால் ஒரு காலமும் வழிகெடமாட்டோம்.

எங்களுக்கு மறுப்பு கூறுவதற்கு இவர்களுக்கு குர்ஆன், ஸுன்னாவிலிருந்து ஆதாரம் கிடைக்காததால், இப்படியான ஒரு தந்திரத்தைக் கையாளுகிறார்கள். அதாவது நாங்கள் செய்யக் கூடிய ஒரு இபாதத்தை சுட்டிக் காட்டி, “நீங்கள் செய்து கொண்டிருக்கக் கூடிய செயலுக்கு வஹியில் ஆதாரமில்லையே! ஸஹாபாக்கள் செய்ததாகத்தானே இருக்கின்றது. அப்படியானால் நீங்களும் இஜ்மாஉஸ் ஸஹாபாவைப் பின்பற்றுகின்றீர்களே! எனவே இஜ்மாஉஸ் ஸஹாபா, தவாதுருல் அமலி, மவ்கூப் போன்ற விடயங்களின்றி எவ்வாறு இபாதத் செய்வது? என்றும் கேட்கின்றனர்.

அல்லாஹ்வின் உதவியினால் வஹியில் இல்லாததை நாம் பின்பற்றுவதாக இவர்கள் கூறும் விடயங்களில், அத்தஹிய்யாத்தில் ஸலவாத்து ஓதுவது, மையித்தை படுக்க வைத்து அடக்குவது போன்ற எத்தனையோ விடயங்களுக்கு குர்ஆன், ஸுன்னாவில் ஆதாரம் இருப்பதை மக்களுக்கு தெளிவுபடுத்தி யிருக்கிறோம். பள்ளியினுள் நுழையும்போது வலது காலை வைப்பதற்கும், வெளியேறும்போது இடது காலை வைப்பதற்கும் ஆதாரம் இல்லை என்று தெரிந்ததும், அதனை மக்களுக்கு அறிவித்து விட்டு, அந்தச் செயலை விட்டும் தவிர்ந்து விட்டோம். இதேபோன்று பிரார்த்தித்து விட்டு கையை முகத்தில் தடவுவதற்கு ஆதாரமில்லை என்று தெரிந்ததும் அதனையும் விட்டு விட்டோம்.

இவ்வாறு வஹியில் ஆதாரம் இல்லாவிட்டால், அந்த செயலை விட்டு விடவேண்டுமே ஒழிய, நாம் செய்யும் செயலுக்கு ஸஹாபாக்களில் ஆதாரம் இருக்கின்றது என்று கூறி, அவர்களின் பெயரால் எழுதப்பட்ட, அல்லாஹ்வால் பாதுகாக்கப்பட்டது என்று உத்தரவாத மளிக்கப்படாத விடயங்களைப் பின்பற்றுவது மடமையிலும் மடமையே. நாம் செய்து கொண்டிருக்கக் கூடிய விடயங்களை இப்படியே விட்டுக் கொண்டு போனால், என்னதான் மிஞ்சப் போகிறது என்று தவறாக சிந்தித்து பித்அத்துக்களைச் செய்து வழிகேட்டில் சென்றுவிடலாகாது.

**முடிவு :**

01. மஸ்ஊத் அஹ்மத் கொண்டு வந்தது ஜமாஅதுல் முஸ்லிமீன் அல்ல. அது ஒரு பிரிவாகும்.

02. அதில் குர்ஆன், ஹதீஸுடன் இன்னும் பல ஷிர்க்கான விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

03. இஸ்லாத்தின் மூலாதாரம் குர்ஆனும் மர்பூ:.வான ஹதீஸ்கள் மட்டுமே.

04. மஸ்ஊத் அஹ்மத் கொண்டு வந்த அமைப்பில் பல பித்அத்துக்கள் காணப்படுகின்றன.

05. முஹம்மது இஸ்தியாக் இன்னும் பல ஷிர்க்குகளைக் கூட்டி ஸுன்னாக்களை ஒழித்துள்ளார்.

06. முத்தலாக், இரண்டு அதான், பிரயாணத்தில் உதுமான் ﵁ அவர்கள் 4 ரக்அத்துக்கள் தொழுதது, பெருநாள் தினத்தில் தகப்பலல்லாஹ் ஓதுதல், பெருநாள் தினத்தில் குளித்தல், பெண் ஸப்பின் நடுவில் நிற்றல், ஸப் செய்யும்போது கையில் தடியை எடுத்தல், துஆ செய்து விட்டு இரு கைகளையும் முகத்தில் தடவுதல், வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்கு பள்ளியின் வாயலில் நின்று அதான் சொல்ல வேண்டும் என்று நம்புதல், ஒருவர் ஒரு ஊரில் போய் தங்கினால் பூரணமாகத் தொழ வேண்டும் என்று நம்புதல், இஜ்மாஉஸ் ஸஹாபா, மவ்கூப், ஹுக்மன் மர்பூ∴, பஹ்முஸ் ஸஹாபா இவைகள் அனைத்தும் பித்அத்துக்களாகும். இவைகளை நம்பி செயல்படுவது இஸ்லாத்தில் இருந்து வெளியேற்றும் நம்பிக்கையாகும். காரணம் அல்லாஹுத்தஆலா அல்குர்ஆனில் :

**அறிந்து கொள்ளுங்கள்! தூய்மையான மார்க்கம் அல்லாஹ்வுக்குரியதே! என்று கூறுகின்றான்.** ( 39 : 03 )

தூய்மையான மார்க்கம் அல்குர்ஆனும் மர்பூ∴வான ஹதீஸ்களுமாகும்.

07. ஷஹாதத் கலிமா இன்றி பைஅத் செல்லுபடியாகாது.

08. பைஅத் செய்த ஒருவர் அவர் யாராக இருந்தாலும், எந்த மதம், எந்தப் பிரிவில் உள்ளவராக இருந்தாலும் அவர் இலந்தை இலை போட்டுக் குளிக்க வேண்டும்.

09. பள்ளிக்குள் ஸுத்ரா வைப்பது கடமையாகும்.

10. பள்ளிக்குள் நுழையும்போதெல்லாம் உட்கார நினைத்தால், தஹிய்யதுல் மஸ்ஜித் தொழுவது நபி வழியாகும்.

11. முஹம்மது இஸ்தியாக்கின் பிரிவில் அதிகமான லயீபான செய்திகளைக் கொண்டு அமல் நடைபெறுகிறது.

12. நபி ﷺ அவர்களின் கப்றில் சென்று வஸீலா தேடுவது ஷிர்க் ஆகும்.

13. பாவமான காரியங்களில் அமீருக்குக் கட்டுப்பட வேண்டும் என்பதனைக் காட்டுவதற்கு, அல்லாஹ் ஆதம் ﵇ அவர்களுக்கு ஸுஜூது செய்யும்படி மலக்குமார்களுக்கு ஏவிய அல்குர்ஆன் வசனத்தை ஆதாரமாகக் காட்டுவது குப்ராகும்.

14. நாங்கள் யாரையும் முஸ்லிம் அல்லாதவர் என்று கூறமாட்டோம்; குப்ரை குப்ர் என்று கூறுவோம்; ஷிர்க்கை ஷிர்க் என்று கூறுவோம் என்பது இஸ்லாத்தைத் தகர்க்கும் அகீதாவாகும்.

15. யஸீத் ﵁ அவர்கள் மதீனாவின்மீது படை எடுத்தார்; அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் ﵁ அவர்கள் பைஅத்தை முறித்தார்; இன்னொரு ஜமாஅத்தை உருவாக்கினார்; தராவீஹ் விடயத்தில் உமர் ﵁ அவர்கள் “இது நல்ல பித்அத் என்று கூறினார் என்பது போன்ற போலி விடயங்களை நம்புவதும் நூல்களில்

எழுதுவதும், தங்கள் அகீதாவை பாழ்படுத்துவதும் பிரிவுகளுக்கு அவர்கள் இருக்கும் கொள்கை சரி என்பதற்கு உரமூட்டும் செயலாகும்.

16. இன்று காணப்படும் முஹம்மது இஸ்தியாக்கின் பிரிவு உட்பட அனைத்துப் பிரிவுகளையும் விட்டுப் பிரிந்து இன்று இலங்கையில் செயல்படும் தூய்மையான ஜமாஅதுல் முஸ்லிமீனோடு இணைந்து சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

17. மின்ஹாஜுல் முஸ்லிமீன் எனும் புத்தகத்தில் உள்ளது அனைத்தும் சரியானதே! அதில் எந்தவொரு மாற்றமும் செய்யமாட்டோம்; மஸ்ஊத் அஹ்மதின் அகீதா பிரகாரமே நாங்கள் நடப்போம் என்று நம்புவதும், வெளிப்படையில் இப்படிக் கூறுவதும் மாபெரும் ஷிர்க்காகும்.

இறுதியாக வாசகர்களுக்கு நாம் விடுக்கும் பணிவான வேண்டுகோள் :

இந்தச் சிறிய பிரசுரத்தில் ஏதும் குர்ஆன், ஸுன்னாவுக்கு மாற்றமான செய்திகள் காணப்பட்டால், தயவு செய்து வாசகர்கள் சுட்டிக் காட்டுமாறு வேண்டுகிறோம்.

எமது முகவரி : ஜமாஅதுல் முஸ்லிமீன்

மஸ்ஜிதுல் முஸ்லிமீன்,

கல்பிட்டி வீதி,

ஏத்தாளை,

புத்தளம்,

இலங்கை.

தொ. பே. இல : 0094 322268818

web site : www.jamaathulmuslimeen.com

email : jamaathulmuslimeen@gmail.com